ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧	கர ஹு வைகாசி மீ	பகுதி ரு

பிரார்த்தனை

ஸ்ரீராமகிருஷ்ண நாமாமிருதம்

[ஸ்ரீராமகிருஷ்ணப் பெருமானின் மெய்யடியார்கள் அவர்க்கு இட்ட திருநாமங்கள் நூற்றெட்டு பின்வருவன. அந்த அடியார்களைப் பற்றி அப்பெருமானது சரிதத்தைக் கற்றவர்கள் நன்கு அறிந்திருப்பார்; அவர்கள் குருதேவர்க்கு இட்ட பெயர்களில் அவரவரது அனுபூதியின் நயம் விளங்கும். பெயர்கள் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன; அவற்றின் எண்ணிக்கையும் குறிப்பிடப்பட்டுள்ளது — ஆசிரியர், ரா. வி:]

வேதியராங் குதிராமர் வியன்கனவில் நினையறிந்து

1. **கர்தலிளஞ் சிசுநிலையில் கதாதரப் பேர் சாத்தினர்.**
2. அன்னைசந் திராதேவி அழைத்தனளால் **கதாய்** என்று.
3. பின்னையொரு தனிக்கமியாள் பெயரிட்டாள் **துலால** என.
   (துலால—செல்வன். தனிக்கமியாள்—'தனி' என்றும் பெயருடைய கம்மாள குலப் பெண்மணி)
4. ஒதுகயா விஷ்ணுவென்பான் **உயிர்த்தோழ** என்றனனல்.
5. சாதுகுலா லச்சீனு **ஜகந்நாதன்** என அழைத்தான்.
   (சீனு—ஸ்ரீநிவாசர்)
6. **ஜகத்ஜனனி** யெனுநாமம் தந்திட்டார் அலதாரி.
7. மகத்தான **ராமரகு மணி** யென்றார் ஜடாதாரி.
8. பேசரிய **சைதன்யா வதார** மென்றார் பிராம்மணியார்.
9. ஆசிரியர் மஹேந்திரநாத் **அமிருதசா கர**மென்றார்.
10. **பதிதபா வனர்** என்றார் பத்திமிகும் கிரிஷ் கோஷர்.
11. துதிமகிழும் ராம்தத்தர் சூட்டினர் **ஜனர்த்தனப்** பேர்.
12. **சுதந்திரஈச் வர**நாமம் சொல்லினர் நரேந்திரரே.
13. **முதந்தரஈந் தனர்கபால மோசனப்** பேர் ஒருசமயம்.
    (முதம்—சந்தோஷம்)

(தொடரும்)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

அவாவறுத்தல்

அனுமான் சொன்னது :

உமது கிருபையால் எல்லா வேதாந்தத்தின் ஸாரத்தையும் ஒழுங்காக அறிந்து கொண்டேன். என்றாலும், ஒரு யானையின் கன்னத்திலிருந்தும் கபோலத்திலிருந்தும் பெருகும் மதஜலத்தின்மீது விரைவிலே அமரும் தேனீக்கள் போல, எனது இந்திரியங்கள் விஷயங்களின்மீது (பொருள்களின்மீது) அமர்கின்றன. இந்திரியங்களின்மீது பற்றுக்கொண்ட என்மனம் இந்திரியங்கட்கு அப்பாலுள்ள பொருளின்மீது எவ்வாறு பற்றுக்கொள்ள இயலும் எனும் எண்ணம் என்னுள் தீயென எரிகின்றது. உமக்குப்பிரியம் உண்டேல், இந்திரியங்களின் சக்திகளை இந்திரியங்கட்கு விளங்கும் பொருள்களினின்றும் எவ்வாறு பிரித்து வேறாக்கலாம் என்பதை எனக்கு உபதேசிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீராமர் சொன்னது :

மாருதி! இப்பற்றற்ற தன்மையை அடையும் பொருட்டுப் பெரியார் இடைவிடாது பழகும் முறையை யான் உனக்குக் கூறுகிறேன். 1 வாசனாக்ஷயம் 2 பூரண ஆன்ம ஞானம் 3 மன நாசம்—இம்மூன்றும் மட்டுமே நன்றாகவும் ஒரே சமயத்திலும் பழகப்படுமாயின், இந்திரியங்கட்கு விஷயங்கள் மீது எழும் பற்றை வெல்ல இயலும். இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஒன்றன்பின் ஒன்றாகப் பழகுவதால், மிக நீண்ட காலப் பழக்கத்தாலும் விரும்பிய பலன் ஒருக்காலும் கைகூடாமல் போகிறது; ஒரு மந்திரத்தின் துண்டங்களாகிய பகுதிகளைப் பற்றித் தியானம் செய்வதால் யாதொரு நற்பயனும் விளையாதவாறு போல. வாசனைகளை ஒழித்துவிட நீ முயற்சிப்பாயானால், மனம் முழுதும் நாசமடையாத காலம்வரை அவற்றைப் போக்க இயலாது. வாசனைகளை அடக்காதவரை மனம் விருத்தியற்ற அமைதி நிலையை அடையாது; தத்துவ ஞானத்தை அனுபூதியாற் பெறும்வரை, சித்தவிருத்திகளின் அடக்கமும் அடையமுடியாது. சித்த விருத்திகள் அடங்காதவரை, தத்துவஞானமும் உண்டாகாது; வாசனைகள் க்ஷயமடையாதபோது, தத்துவ ஞானம் எவ்வாறு பெறமுடியும்? தத்துவஞான அனுபூதி இல்லாதவரை, வாசனாக்ஷயம் ஏற்படாது. தத்துவ ஞானமும் மனோ நாசமும் வாசனாக்ஷயமும் ஒன்றையொன்று பொறுத்துள்ள ஏதுக்களாதலின், தனித்தனியே அவற்றை அடைவது அரிதாதலால், போக இச்சையை ஒழித்த பின்பு இம்மூன்றையும் ஒரே சமயம் பழகுதல் வேண்டும். ஓ மாருதி! விதேக முக்தியை நாடுபவன் முற்கூறிய மூன்று சாதனங்களையும் அவசியம் பழகுதல் வேண்டும்; அவ்வாறு பழகாதபோது அம்முக்தியை அடைய ஒண்ணாது.

அனுமான் சொன்னது :

பிரபுவே! தானும் பிரம்மனும் ஒன்றெனக் காணும் ஜீவன் முக்தனிடம் எல்லாத்துயரங்களின் நிவிருத்தியும் ஆனந்தப் பிராப்தியும் (பேறும்) உளவாகும். பலமான இந்த உலக வாசனைகள் அவனிடத்துக் காணப்படுமாயின், ஜீவன்முக்தி நிலையினை அடைந்தவனாக அவனைக் கூறமுடியாது. அவன் பூரண தத்துவஞானம் பெறுவதும், மனமற்ற நிலையை அவன் அடைவதும் நன்கு அறியப்பட்ட விஷயங்களே; ஆனால் இவ்வுலகிலே வாழும் அஞ்ஞானியின் இயல்பு அவனது மனநிலையினின்றும் தெளிவாக அறியப்படும். பிரபுவே! யாரால் முற்கூறிய மூன்று சாதனங்களையும் ஒரே காலம் பழக முடியும்? ஒன்றைமட்டும் ஒரே சமயம் பழகுதலும் மிக அருமையென நான் நினைக்கிறேன்.

ஸ்ரீராமர் கூறியது :

ஆகாமியம் சஞ்சிதம் எனும் பெயர்பெற்றனவும், பிராரப்தத்தினின்றும் வேறுபட்டனவுமான துக்கங்களை ஜீவன்முக்தன் வென்றவனாவான். (பிராரப்தத்தின் பயனாக) திருஷ்ட (கண்ணிற்கு விளங்கும்) துக்கங்கட்கு உட்பட்டவனாதலின், சந்தேகமின்றி அவனது ஆனந்தானுபவம் துக்கத்திற்குக் கட்டுப்பட்டதேயாகும்; ஆனால் விதேக முக்தனிடமோ, கட்டுக்கு உட்படாத ஆனந்த அனுபவம் உள்ளதாகும். பிராரப்த கருமத்தினைச் சார்ந்த வாசனைகள் முன்னிருந்தவற்றைப் போன்றனவல்ல; அக்காரணத்தால் அவை எவ்விதத்தும் அவனது ஜீவன்முக்திக்கு இடையூறாகா, ஜீவன்முக்தன் பூரணமான ஞானதிருஷ்டி நிலையை அடைந்துள்ளவன். ஆனால் (அனுபவத்தாலே) பிரம்மத்தோடு தான் ஒன்றான அறிவைப் பெற்றிராதவன். அவனது ஸொரூப மனம் அழிக்கப்பட்டுவிட்டது; அரூபமான மனத்தையும் நாசஞ் செய்வதால் மனமற்ற நிலையை அவன் அடைந்தவனல்லன். எப்போதும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஒருவரது மகனாயிருந்தும் (வாயு புத்திரனாயிருப்பினும்,) எதன்

மீதும் பற்றற்ற ஒருவரது மகனாதலின், (வாயு நல்ல வாசனையையும் தீய வாசனையையும் சுமந்து சென்றாலும், அதனால் பாதிக்கப் படாதது போல,) இவ்வுலகில் உன்னைப் போன்ற ஒருவனே முற்கூறிய மூன்று சாதனங்களையும் ஒரே சமயம் பழகும் திறமை யுள்ளவனாவான்.

மாருதி! இந்த இந்திரிய விஷயங்களின் பரிசத்தால் மிகச் சிறிய அளவும் நீ பாதிக்கப் படுவதில்லை; ஆதலின் இம்மூன்று சாதனங்களையும் பழகுதல் உனக்கு எளிதேயாகும் என யான் முழுதும் நம்புகிறேன். இம்மூன்றையும் சம அளவிற்கு ஒரே சமயம் மீண்டும் மீண்டும் பழகாதவரை, நூற்றுக் கணக்கான ஆண்டுகள் கழியினும் இலக்ஷியத்தை அடைய மாட்டான். தாமரைத் தண்டு ஒடியும் போது, அதற்குள்ளே யிருக்கும் நார்களும் ஒடிவதுபோல, இம்மூன்று சாதனங்களையும் நெடுங்காலம் பழகுபவன் தனது இருதயக் கிரந்திகளைச் சந்தேகமின்றி உடைத் தெறிவான். இம்மித்தை யுலகினின்றும் நாம் பெற்றுள்ள வாசனைகள் நூற்றுக் கணக்கான பண்டைய பிறவிகளினின்றும் பெறப்பட்டுள்ளன. நெடுங்காலம் யோகம் பழகுவதாலன்றி வேறு எவ்வகையாலும் அவை அழிக்கப்படுவதில்லை. லோக வாசனையாலும் சாஸ்திர வாசனையாலும் தேகவாசனையாலும் தான், உண்மை நிலையைப் பற்றிய அறிவு உயிரோடிருப்பவரால் அடையப் படுவதில்லை. உன்னிடத்துள்ள வாசனைகளின் திரள்கள் சுத்தம் அசுத்தம் என இருவகையாக உள்ளன. இவ்விரண்டில் சுத்த வாசனைகளின் கூட்டத்தால் நீ நடத்தப்படுவையாயின், (நாளடைவில்) அவ்வழியே நீ எனது நிலையினை அடைவாய். அசுத்த வாசனைகளின் திரளை அழிப்பதனால் நீ உடனே கட்டற்ற சந்தோஷம் (ஆனந்தம்) அடைவாய்.

அனுமானே! அசுத்த வாசனைகளின் பயனாக நீ கஷ்டத்திற்கு உள்ளாயின், அது உனது பண்டைய கருமத்தின் பலனாதலின், உன் முயற்சியால் வெல்லவேண்டும். வாசனைகள் எனும் சிற்றாறு சுத்தமும் அசுத்தமும் எனும் இருவாய்க்கால்கள் வழியாகவும் ஓடுகிறது; ஆனால் மனித முயற்சியினால் அந்த நீரோட்டத்தின் திசையை மாற்றவேண்டும். சுத்தமான வாய்க்கால்வழியாகவே ஓடும் படிச் செய்யவேண்டும். அசுத்த வாசனைகள் நிறைந்த மனத்தைச் சுத்த வாசனைகள் நிறைந்ததாக மாற்றவேண்டும். வாசனைகளை அசுத்தமான வாய்க்கால் வழியாகச் செல்வதைத் தடுத்துத் திருப்பும்போது, அவை சுத்தமான வாய்க்கால் வழியே செல்லும். மனம் கேட்பவைகளையெல்லாம் கொடுத்துத் திருப்தி யளிப்பவனைப் போன்று பாவித்து, ஒருவன் தன்னாற் செய்யக்கூடிய மனித முயற்சியால் சித்தம் எனும் குழந்தையிடம் கொஞ்சி விளையாட வேண்டும்.

பகைவரை எரிப்போனே? பழக்கத்தின் வலிமையால் சித்தத்தினின்றும் கிளம்பும் வாசனைகள் விரைவிலே வெளிவரத் தொடங்கினால், உனது சாதனம் பலனைப் பெறுகிறதென அறிந்துகொள். சந்தேகம் வரும் போதும், சுத்த வாசனைகளைமட்டும் திரும்பத் திரும்பப் பின்பற்றுக. சுத்த வாசனைகளைப் பெருக்குவதில் கேடு இல்லை. அசுத்த வாசனைகளின் திரளுக்கு அடங்கியொழுகும்போது மனம் கட்டுப்பட்டதென்றும், தூயவாசனைகளின்வலிமையால் அசுத்த வாசனைகளினின்றும் விடுபடும்போது அது விடுதலை பெறுகின்றது என்றும், ஞானிகள் அறிவார். வீரனே, எவ்வித வாசனைகளும் அற்ற மனநிலையை அடைய முயற்சி செய். பூரணஞானம் பெறும்போதும், தத்துவம் அனுபூதிக்கு இலக்காகும் போதும் வாசனைகள் கரைந்தழிந்து விடுகின்றன. அகண்டாகார விருத்தியாலும், அகண்டை கரசத்தின் (உதயம் அஸ்தமனம் எனும்) இருவகைகளாலும், வாசனைகள் அழியும்போது எண்ணெயும் திரியும் அற்ற விளக்கைப் போல, சித்தமும் ஓய்ந்து அடங்கிவிடும். (தொடரும்)

— 'ராம கீதை'

குருதேவர் உபதேச மணிமாலை

(89-ம் பக்கத் தொடர்ச்சி)

829-கருமங்களை தேடித் திரியாதே

பிறர்க்குறு நன்மை பிரிந்திடும் போதும்
பிற்பயன் பற்றுற லாகா;
சிறப்புற நீக்காச் செய்கடன் மட்டே
செய்திடல் வேண்டுநன் றாக
அறத்தொடு மாற்றி யமைத்திட லாகா
அருவினை மேற்கொள வேண்டாம்;
மறப்புற நேரு மாதவன் றன்னை
வகுத்தவிவ் வழிபிழைத் திடிலே. 161

(பிழைத்திடில்-தவறிச் சென்றால்).

833-கருமத்தின் முடிபு சமாதியில்

திகழ்தரு சந்தி வந்தனை காயத்
திரியினி லடங்கிடு மதுதான்
புகழ்தரு பிரண வத்தினி லடங்கும்,
போற்றுமப் பிரணவ முடிபில்
இகழ்வறு சமாதியினிலடங் கிடுங்காண்,
இம்முறை சற்கரு மங்கள்
அகிலமு முடிபி லகத்துறுசமாதி
யதிலடங் கிடுமியல் பினிலே 162

(இகழ்வறு - இகழ்ச்சியில்லாத. அகிலம் - எல்லாம்.)

834-மன ஐக்கியம் வரை கருமம்

சச்சிதா நந்தத் தனிப்பொரு டன்னில்
தன்மன மிலயமா வதுகா
றிச் சகச்செயல்க ளியற்றலு மிறைவ
னியற்பெயர் வழுத்தலும் வேண்டும்;
மெச்சுறு கருமம் பிற்செயல் வேண்டா;
வித்தகப் பாடகன் முதலில்
எச்சிசை தானம் கருதுவன் பொருளில்
இலயமுற் றிடினவை கருதான். 163

(ஆவது காறு-ஆகும்வரை. இச்சகச் செயல்-இவ்வுலக கருமம். வழுத்தல்-ஓதுதல். எச்சு இசை-உயர்ந்த ஓசை.)

837-எச்சிற்படாதது பிரம்மம்

வேதசாத் திரங்கள் விளம்பிடும் புராணம்
விதிகிளந் திடுமிவை யெல்லாம்
ஓதலா லுமிழ்ந்த வுணவுபோ லெச்சி
லுற்றன, அகண்டமாம் பிரமம்
போதவிங் கொருவ ரால்விளக் குறுத்திப்
புகன்றிடப் படாமையி னவைபோல்
சேதமா ரெச்சி லானதின் றும்பல்
திறத்தினுந் தனிப்பொரு ளதுவே. 164

(கிளந்திடும்-சொல்லும். போத-போதுமானபடி. பல்திறம்-பலவகை.)

839-பிரம்மம் விளக்கொளி போன்றது

சொல்லிடு நன்மை தீமைக டம்மில்
தொடர்புறு திருந்திடும் பிரமம்,
நல்லொளி விளக்கின் சுடர்ப்பிழம் பொக்கும்,
தூயதாஞ் சுடர்ப் பிழம் பொளியில்
பல்லக மொழிக்கும் பாகவ தத்தைப்
படிப்பது மாமல தயலோர்
அல்லலி லுறவே யழிபழிப் பொய்ம்மை
யாவண மெழுதலு மாமே. 165

(பல் அகம்-பல பாவம், படிப்பதுமாம் அலது அல்லாமல். ஆவணம்-பத்திரம்.)

847-சமாதியில்தான் பிரம்மானுபவம்

அகண்டமாம் பிரமஞ்சமாதியின் மட்டும்
அறிந்திடப் படுவதா மப்பால்
அகன்றதோர் மவுன மாகிடும், நீங்கு
மறிவறி யாமையின் வாதம்,
புகன்றிட லாகாத் தற்பர வடிவே
பொருந்திடும், பிறிதெது மில்லை,
பகர்ந்திடு முப்புப் பாவைமா கடலிற்
படிந்தபின் வெளிப்படா தன்றே. 166

(அறிவு - அறியாமை - ஞானம் - அஞ்ஞானம். பாவை-பொம்மை.)

சிவானந்த வாணி

(ஆர். ராமகிருஷ்ணன் எம். ஏ., எல். டி.)

பேலூர் மடம், 1929, மே 1, புதன்

இளைஞன் ஒருவன் வைராக்கிய புத்தி மேலிட்டவனாய் பி. ஏ. பரீட்சை எழுத வேண்டியிருந்ததையும் பொருட்படுத்தாதவனாய் ஆத்மீய சாதனை புரிவதற்காக வீட்டை விட்டு வெளிச் சென்று விட்டான். ஆனால் அவனுடைய போஷகர்கள் அவனைத் திருப்பி அழைத்து வந்து வீட்டில் இருந்துகொண்டே தியான ஜபம் செய்து வருமாறு அவனுக்குக் கூறினர். அது முதற்கொண்டு அவ்விளைஞன் மகாபுருஷ மகாராஜருடைய உபதேசத்தை யொட்டி வீட்டில் இருந்துகொண்டே சாதனை புரிந்து வந்தான்.

இவ்விளைஞன் இன்று மகாபுருஷரைக் காண வந்தான்' அவருக்கு நமஸ்காரம் செய்து எழுந்ததும் அவனை மகாபுருஷர் "என்ன, எப்படி இருக்கின்றாய்?" என்று வினவினர்.

இளைஞன்: மகராஜ்! என் உடல் நன்றாகத்தான் இருக்கின்றது......ஆனால் என் மனம் மிகுந்த சஞ்சலமுடையதாக இருக்கின்றது. மனத்தின் கண் கொஞ்சமும் சாந்தி இல்லை. சாந்தியின்மையே மிகுந்து இருக்கின்றது.

மகாபுருஷர்: உனது மனத்தின் கண் இவ்வாறு சாந்தியின்மை ஏற்பட்டுள்ளதே, அதிலிருந்தே நீ தெரிந்து கொள்வாயாக, அன்னை உன்னிடம் கிருபை கொண்டுள்ளாள் என்று. அன்னையை அடைவதற்கு உனக்குள்ள இந்தப் பேராவலும், அன்னையை அடைய முடியாத காரணத்தால் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள சாந்தியின்மையும் —இவையெல்லாம் அன்னையினது கிருபை

யின் அடையாளங்களாகும். பல பிறவிகளில் செய்த நற்செய்கைகளின் பயனுக, இவ்வாறு ஈசுவர கிருபை ஏற்பட்டு மனிதனுடைய உள்ளத்தில் முக்தியடைய வேண்டும் என்ற விருப்பம் தோன்றுகின்றது. இப்பொழுது மிகுந்த வியாகுலத்துடன் கசிந்து பிரார்த்தனை புரிவாயாக: "தாயே உன்னை எனக்குக் காட்டியருள்வாயாக, நான் சாதனை புரிந்தவன் அல்லன், பகவத் ஸ்மரணை செய்தவன் அல்லன். நான் ஒரு பலவீனன். என் மீது கிருபை கூர்ந்து காட்சி தந்தருள்வாயாக" என்று பிரார்த்தனை புரிவாயாக. வேறு எதையும் பொருட்படுத்தாமல் இருந்து அன்னையை மட்டும் அழைத்துக்கொண்டிரு. மனம் ஒருமைப் பட்டாலும் சரி, படாவிடினும் சரி, அன்னையை அழைப்பதை மட்டும் நிறுத்தி விடாதே. உறுதியாக இருந்து பரம்பரையாக விவசாயம் செய்யும் உழவனைப் போன்று உனது இலக்ஷியத்தை விடாது இருப்பாயாக. அப்பொழுது தான் அன்னையினுடைய கிருபை உனக்குக் கிடைக்கும். ஆதலால் தான் உனக்கு நான் கூறுகின்றேன், ஏனே அங்குமிங்கும் நீ அலைந்து திரிய வேண்டும்? வீட்டிலிருந்து கொண்டே அன்னையை ஸ்மரித்துக் கொண்டிரு. அங்கேயே அன்னை உன்மீது கிருபை காட்டி, ஸம்ஸாரத்தின் அநித்தியத் தன்மையை நீ உணருமாறு செய்வாள், உன் சம்சார பந்தங்களை அறுத்தும் விடுவாள்.

இளைஞன்: சிற்சில வேளைகளில் தியானம் செய்யும்பொழுது எனக்கு நல்ல ஆனந்தம் ஏற்படுகின்றது. வேறு சில வேளைகளில் மனம் எனக்கு வசப்படுவதே கிடையாது.

மாபுருஷர்: மனத்தின் இயல்பு இத்தகையது தான், அது அலையின் போக்கை ஒத்தது. அலைகளைக் கவனித்துப் பார்த்திருக்கின்ருய் அல்லவா? ஒரு சமயம் மிகவுயர்ந்த அலையொன்று வருகின்றது. அதன் பின்னாலேயே ஆழ்ந்த பள்ளம் ஒன்று ஏற்படுகின்றது. மீண்டும் அலையொன்று வருகின்றது. ஒவ்வொரு சமயம் உன்னல் மனத்தை அடக்க முடியாது போகின்றதல்லவா, அதினின்றும் நீ தெரிந்து கொள்ளவேண்டியது இது தான் —மீண்டும் பெரிய அலையொன்று உன் உள்ளத்தில் எழும், அப்பொழுது நீ நல்ல ஆனந்தத்தைப் பெறுவாய். ஆனல் உத்தம பக்தர்களோவெனில் இன்பத்தால் உள்ள எழுச்சி பெறவும் மாட்டார், துன்பத்தால் சோர்வுறவும் மாட்டார். எல்லாம் ஜகன்மாதாவின் இச்சைப்படியே நடைபெறும். அன்னை எப்பொழுதும் கிருபை புரிவாள் 'என்று தெரிந்து, சமபுத்தியுடன் அன்னையைக் கூவியழைப்பாயாக. அன்னை உன்னை எந்த நிலையில் வேண்டுமானலும் வைத்திருக்கட்டும். நீ அதை ஏற்றுக்கொள். இவ்வாறு செய்து வந்தால் உனக்குப் பூரண ஆனந்தமும் அன்னையின் பரிபூரண தரிசனமும் கிடைக்கும். நீ ஒருபொழுதும் சஞ்சலம் அடையாமல் இரு. அன்னை உனக்குக் கிருபை செய்துள்ளாள். இன்னும் அதிகமாகவும் கிருபை புரிவாள் என்று நான் உறுதி கூறுகின்றேன். உன் தலைமயிரை ஏனே இவ்வாறு வளருமாறு விட்டிருக்கின்ருய்? மயிரை நன்ருகக் கத்தரித்துக்கொள். சமயசாதனையின் பெயரைக் கூறிக்கொண்டு உடலைச் சீர் இன்றி வைத்திருத்தல் வெறும் வேஷமேயாகும். பத்துப் பேர் எவ்வாறு வாழ்கின்றனரோ அவ்வாறே நீயும் இருந்து வருவாயாக. வெளி விஷயங்களில் மற்றவர்களினின்றும் வேறுபட்டிருக்க வேண்டாம். உள்ளத்தின் கண் ஜகன் மாதாவை ஸ்மரித்துக் கொண்டிரு. அன்னை உன் உள்ளத்தில் இல்லாமல் வெளியில் தானு இருக்கின்ருள்? இப்பொழுது கொஞ்ச நேரம் பூஜையறைக்குச் சென்றிருந்து இறைவனைத் தரிசித்து விட்டுப் பின்னர் கொஞ்சம் பிரசாதம்பெற்றுக் கொள்வாயாக.

பேலூர் மடம், 1929, மே 7, செவ்வாய்

பக்தர் ஒருவருக்குத் துறவியாக வேண்டுமென்ற இச்சை மிகுந்திருந்தது. அவர் மகாபுருஷ மகராஜரிடம் தமது இச்சையைத் தெரிவித்துக் கொண்டார். மகாபுருஷர் அவருக்கு இவ்வாறு விடையளித்தார்.

"இதைப்பற்றி எனக்கு என்ன தெரியும்? உமக்கு உள்ளத்தில், உண்மையாகத் துறவியாக வேண்டுமென்ற இச்சையிருக்குமானல் நிரம்பவும் சரி, உலகத்தைத் துறந்துவிட்டு வெளியேறுவீராக. சம்சாரம் அநித்தியமானது என்பதை நீர் உணர்ந்து கொண்டீரா? உணர்ந்து கொண்டீரானல், அது மிகவும் நல்லதாயிற்று. எங்கோ சென்று ஆழ்ந்த சாதனை புரிவீராக. அதற்கு என்னுடைய அனுமதியோ அனுமதியின்மையோ அவசியமில்லையல்லவா? இறைவனையே முற்றிலும் நம்பி நின்று உலகைத் துறப்பது பெரும் பாக்கியமேயாகும். ஆண்டவனுடைய கிருபை இல்லாமல் இது ஏற்படாது. இப்பொழுது நீர் மடத்தில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற ஆவசியகம் இல்லை. முதலில் சாதனையில் ஆழ்ந்து முயற்சி செய்வீராக. பிறகு உம்முடைய உள்ளத்தில் இறைவனது ஆதேசம் ஏற்படுமானல் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து கொண்டு மடம் ஆற்றிவரும் பணிகளைப் புரிந்து வரலாம்".

நமது சிகர ஜோதி

வேண்டுவது ஞான நோக்கே

தனிவாழ்க்கையிலேனும் ஸமூக வாழ்க்கையிலேனும், சிறு நாட்டிலேனும் உலக முழுவதிலேனும், சாந்தி (அமைதி) நிலவ வேண்டுமாயின், மக்களின் மன நோக்கு மாற்றமடைந்து உயர்ந்ததாதல் வேண்டும். உலக வாழ்வை ஒரு மனிதன் மூன்று நிலைகளில் யாதேனும் ஒன்றினின்றும் நோக்கி, அதற்கியைந்தபடி வாழ்வை நடத்தி, அதற்கு ஏற்பட்ட பயனை அடையலாம். மனித வாழ்விலே மக்களால் அடைதற்குரிய பொருள்களை நான்கென வகுத்துள்ளனர் அறிஞர்; அவையாவன: அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இந்நான்கினுள் பொருளும் இன்பமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவேயாம்: எவ்வாறெனில் பொருளுடைமை இன்ப நாட்டத்தை வலியுறுத்தும்; பொருளிலார்க்கு இவ்வுலக இன்பம் இல்லையாதலாலும், உலகஇன்பம் பெறுதற்குப் பொருளினும் சிறந்ததுணை வேறில்லையாதலாலும், ஒன்றை நாடுவார் பொதுவாக மற்றொன்றை வேண்டாதிரார் ஆதலாலும் என்க. ஆகப் பொருளையும் இன்பத்தையும் சேர்த்து ஒன்றாக்கலாம். இவ்விரண்டையும் பெறுதலையே வாழ்க்கையின் உயர்ந்த பயனாகக் கருதுவாரது மன நோக்கு உலகியல் நோக்கு எனப்படும். இந்நோக்குடையார் பொருளையும் இன்பத்தையும் பெறத்துணையாகாதபோது அறத்தையும் கைவிடுவார்; ஞானத்தைக் கைவிடுவரென்பது மிகையாம். உலக வாழ்விற்கு வேண்டிய பொருளையும் இன்பத்தையும் அறவழியாலன்றி வேறுவழியாற் பெறுவதை விரும்பாதவரும், அறத்தின் மாட்சியைப் பெறுதற்பொருட்டுப் பொருளையும் இன்பத்தையும் இழக்க நேரினும் அதைப் பொருட்படுத்தாது நற்பேறு என்றே மதிப்பாரும் அறநோக்கு உடையார் எனப்படுவர். இதற்கும் மேலாக ஞான நோக்கு ஒன்றும் உள்ளது. அறநெறியைப் பின்பற்றுவதும் இறைவனை அடைதற்காகவே, பிறவிக் கடலை நீந்தி முக்திக் கரையைச்சார்தற்கே என்னும் துணிபுடையராய், அறத்தின் வடிவமும் உறைவிடமுமாகிய இறைவனை மகிழ்விக்கும் பொருட்டு அவனது ஆணைக்கு இணங்கிஒரோவழி (சிலசமயங்களில்) வாய்மை, அன்பு முதலான சாமானிய அறங்களையும் மீறுபவர் ஞான நோக்கு உடையார் எனப் படுவர். ஞான நோக்கிற்கு அறத்தில் வேரூன்றி நிற்றல் அடிப்படை யாயினும், அறம் மறம் இரண்டையும் கடந்த நிலையே ஞான நிலையாம். சிறுத்தொண்ட நாயனர், சண்டேசுர நாயனர் போன்ற மெய்யன்பர்களின் வாழ்க்கைகள் இதற்குச் சான்றாம். மூன்று வகை நோக்குகளில் அறநோக்கு உலகியல் நோக்கினும் சிறந்தது; ஞானநோக்கு ஏனைய இரண்டினும் சாலச் சிறந்ததே. ஞான நோக்கு உடையார்க்கே எந்நாளும் துன்பமில்லாத பேரின்பப்பேறுஉரிமையாம்; அன்னார்க்கே சாந்தி (அமைதி) அழியாத நிலையான அனுபவமாம். உலகியல்நோக்குடையார்க்கு உலக போகமும், அறநோக்குடையார்க்குப் புண்ணியமும் சிறந்த தேவ போகமும், ஞானநோக்குடையார்க்குச் சாந்தியும் ஈடும் எடுப்புமற்ற திவ்விய ஆனந்தமும் பயன்களாக விளையும். இதனால் உலகிலே அமைதி நிலவவேண்டின், ஞானநோக்கே தனிவாழ்க்கையிலும் சமூகவாழ்க்கையிலும் மிகவுயர்ந்ததாகப் பாராட்டப்பட வேண்டும், பேரவாவோடு பின்பற்றப்படவும் வேண்டும்; இதையன்றி வேறு வழிஇல்லை யென்பதுஉறுதி.

ஆனல், தற்கால வாழ்க்கையிலே மக்களும் நாடுகளும் ஒரு முக்கியமான கருத்தை ஒப்புக்கொள்ள மறுப்பதுண்டு; காரணம் அக்கருத்து அவர்கட்கு வேம்பாதலே. அக்கருத்து யாதெனில், மூன்று நோக்குகளையும் ஒரே சமயம் பின்பற்ற முடியாது என்பது. கற்கண்டனைய உலக போகங்களைச் சுவைப்பார்க்கு அறவாழ்வு வேம்பாகும்; அற வாழ்வில் இன்பம் பெறினும் ஞான வாழ்வு கசப்பாகத் தோன்றுதல் உண்டு. மூன்று வகை நோக்குகளும் ஒரே சமயம் ஒரேஅளவிற்குத் தலையெடுத்தல் என்பது இயலாததாகும். உலகபோகங்களை வேம்பாகவெறுப்பார்க்கே அறவாழ்வு சர்க்கரைக் கட்டியாக இனிக்கும்; அற வாழ்விலும் உவர்ப்புத் தன்மை தோன்றும் போதே ஞான வாழ்வு கற்கண்டாகத் தித்திக்கும். தாழ்ந்ததை வெறுக்கும் அளவிற்கே உயர்ந்ததில் அவா உண்டாகும். உலகியல் நோக்கினையொழித்து அறநோக்கினைக் கைப்பற்றல் முதலில் இன்றியமையாதது; அன்றியும் அறவாழ்வு வலியுறுத்தப்படவேண்டின், நிலையாயிருக்க வேண்டின், ஞான நோக்கு அற நோக்கிற்குப் பதிலாக அமையவேண்டும். இவ்வுண்மைகளை உணரமாட்டாத தனிமனிதரும் ஸமூகங்களும் உலகப்போகங்களையும் பொருள்களையும் நுகர்ந்து கொண்டே அறத்தை நிலைநாட்டவும், அமைதியை அனுபவிக்கவும் விழைகின்றனர்; மதி

மயக்கத்தால் அம்முயற்சியில் தோல்வியுறுகின்றனர். அமைதிபெறுதற்கு அறம்அடிப்படையாதலை ஒப்புக்கொள்வார்; ஆயினும் உலகியல் நோக்கை ஒழித்து ஞான நோக்கைப் பற்றாதபோது அற ஒழுக்கம் உறுதி பெறாது என்பதை உணரார். இம்மைப் பொருள்களையும் புகழையும் அதிகாரத்தையும் ஆதரத்தோடு பேணும்வரை, முழு அறவலிமையும் மனத் தூய்மையும் மனத்தே குடிகொள்ளல் ஒண்ணாது; வாழ்க்கையின் மீது நாம்கொள்ளும் நோக்கின் தாழ்வினால் நமது அறவலிமை குன்றிப்போகின்றது. நாடுகட்கும் தனிமனிதர்க்கும் இவ்வாறு அறஉணர்ச்சி சிறுகும்போது உலக அமைதிக்கு ஆபத்து விளைகிறது; போர்க்கு நாட்கால் நடப்படுகிறது. கல்வியால் உலகஅமைதியை நிலைநாட்டலாகும் என்பார் சிலர்; ஞானநோக்கினை வற்புறுத்தாது, உலகியல் நோக்கினை ஆதரிக்கும் கல்வியும் போரெனும் செடிக்கு நீரூற்றவே பயன்படுவதாகும்.

போர்க்கு வேராகும் காரணங்களை நாடுகள் உன்னுவதில்லை. ஸமூகவாழ்விலே போர் நோய் காணும் போது, அந் நோய்க் காரணத்தை ஆராய்ந்து, நோய்க்குறிகளைத் தணிக்கும் முறைகளை நாடுகின்றன. தேசாபிமானமும், இராணுவ வலிமையும், பேரரசு செலுத்தும் அவாவும் சருவாதிகார வெறியும் பொதுவுடைமை நாட்டமும், பொருளாதார நிலையின் மெலிவும் போர்க்கு ஆதாரமான முதற்காரணங்களாகா; அவை துணைக்காரணங்களாகலாம். முதற் காரணமாவது (அடிப்படைக் காரணமாவது) உலகியல் நோக்கினை வேராகக்கொள்ளும் பேராசையே (உலோபமே). உலோபம் எனும் உட்பகையே மூல காரணமாக, அதனாற்பொருளாதார நிலையை வலியுறுத்தும் அவா கிளைப்ப, அதனைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டே செழிப்புத் திமிருற்ற நாடுகள் எளிய நாடுகளின் மீது வலியப் போர் தொடங்குகின்றன. ஆதலால் மூல காரணத்தைக் கல்விக் களையாது, இராணுவத் துறையிலோ அரசியல் துறையிலோ பொருளாதாரத் துறையிலோ சிற்சில திருத்தங்களையும் ஏற்பாடுகளையும் அமைத்தலினால், நாடிய பலனாகிய சாந்தி கைகூடாது போகின்றது. இதனை வல்லரசுகள் முதலில் சிந்தித்தறிந்து, நமது உலகியல் நோக்கினை ஒழிக்க முயல்வாராக; அங்ஙனம் செய்யாத வழி, ஒரு கிளையை வெட்டலும் மற்றொன்று அடியிலிருந்து முளைக்கும்கதையாய்முடியும்.

ஆனால் இதை வாசிக்கும் நண்பர்களில் பலர் "மக்களிற் பெரும்பாலார் உலகியல் நோக்கிற்கே வசப்பட்டு உழல்கின்றார் என்பது உண்மையா? ஞானநோக்கு அவர்கட்குப் புறம்பானதா? கடவுளும் ஆன்மாவும் சுவர்க்கமும் நரகமும் முத்தியும் உள்ளதை உணராது வாழ்கின்றனரா? கோயில்கட்கும் மசூதிகட்கும் 'சர்ச்சு' கட்கும் செல்லும் கூட்டம் பெருகிவருகின்றதே. உலகெங்கும் மக்கள் கடவுளிடம் தமது குறைகளைக் கூறிவழிபட்டுவருகின்றனரே" என்று மறுப்புக்கூறுகின்றனர். பலர் வெளிப்படையாக மேலெழுந்த வாரியாகக் கடவுட் பற்றுடையராகக் காணப்படுவது மெய்யே; உண்மையில் அன்னார் கடவுள் நம்பிக்கையுடையரா? உலகெலாம் படைத்த ஒருதனி முதல்வன், எல்லாம் வல்லவன், எல்லாம் அறிந்தவன், அருட்கடலாவான், இன்பவடிவினன் இறைவன் என்பதில் உண்மையான நம்பிக்கை இருக்குமாயின், அவனை விட்டு அற்ப உலகப் பொருள்களை மக்கள் மதிப்பரோ, நாடுவரோ? பொருளும் உலகபோகமும் மனத்தை இழுத்து வெறிக்குள்ளாக்குவது போன்று, முத்தியும் கடவுளும் மனத்தைக் கவர்கின்றனவா? கடவுளைக் கை தொழும், வாய் வாழ்த்தும், மனம் அவரிடம் பிரார்த்திக்கும்; ஆனால் பொன்னையும் போகத்தையும் நல்குமாறு மனம் வேண்டும். இறைவனையும், உலகப் பொருள்களைப்பெறுதற்கு ஏற்ற சாதனமாகக் கருதிப் பற்றுவார் மிகப் பெரும்பாலோர். 'ஆயிர மனிதரில் ஒருவரே முத்திக்காக முயல்வார்' என்றார் கீதாசாரியார். இதனால் உலகிலே மெய்யான கடவுட் பற்றுடையார் இல்லையெனக் கூற வந்ததாகாது. இறைவன்பாற் பித்துடையார் ஒரு சிலர் இருத்தலாலேயன்றோ, கடவுளின் நினைவும் நம்பிக்கையும் உலகத்து இன்றும் உலவி வருகின்றன? ஒரு மதப்போதகர் ஒரு சமயம் "எனக்குப் பர உலகஞ் செல்லும் அவா இல்லை. பர உலகமே இம் மண்ணிடை வரவேண்டும் என்றேயிருப்பேன். இங்கே தான் வாழ எனக்கு விழைவு" என்று கூசாதுரைத்தார். காணாத உலகத்தினும் காணும் உலகம் மிக்க மெய்ம்மையுற்றதென்பதே அவரது அனுபவம்; அருவ உலகிற்காக உருவ உலகை இழக்க அவர் அஞ்சுகின்றார். ஆனால் இயேசு நாதரோ 'என் உலகம் இவ்வுலகைச் சார்ந்ததன்று' என அழுத்தந் திருத்தமாக அறைகின்றனர்.

இன்னும் சிலர் "அறத்தோடியைந்த வாழ்வைக் கடைப்பிடிக்கக் கடவுளிடம் நம்பிக்கை எற்றுக்கோ?" என்று வினவுவர்; கடவுளை நம்பாதவராயினும் அறக் கடலாக மிளிர்ந்த புத்தர் போன்றார் இல்லையோ என்று எதிர்த்

துரைப்பர். அறத்தையே உயிர்நிலையாகக் கொண்டுவாழ்ந்த சான்றோர்உளர் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் அன்னார் உலகியல் நோக்கை முற்றும் ஒழித்து, அற நோக்கினையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்தார். உலகவாழ்வினும் அறவாழ்வு பெருஞ் சிறப்புடையது என்னும் உறுதியால், உலகப் பொருள்களையும் போகத்தையும் துறந்து அற நியதிக்குக் கட்டுப்பட்டு ஒழுகினர். அறமே உலகத்தை ஆண்டு வருவதையும், உலகச் செல்வங்களினும் மெய்ம்மையினை உடையது அது என்பதையும் அவர் கண்கூடாகக்(நேராகக்) கண்டார். ஆதலால் அறம் அவர்களது வாழ்வில் ஆழமாக வேரூன்றி நிற்றற்கு உலக வாழ்வு இடையூறாகவில்லை. ஆனால் இம்மாதிரியான பெருந்தகையாளர் பதினாயிரத்தில் ஒருவரேயாவார். பொதுப்படக் கூறுமிடத்து, அற வாழ்வு உறுதிப்பட்டு நிலைத்தற்கு ஞான உண்மைகளில் நம்பிக்கை வலுப்பெறுதல் இன்றியமையாததாகும்.

உலகியல் நோக்கு நம்மைப் பிணித்தற்குக் காரணம் யாது? நாம் அழிவற்ற ஆன்மாக்களே என்பதை மறந்து, நிலையற்றஉடல்களே யென்னும் பாவனையில் மூழ்கியிருத்தலே. இதனாலே உடற்பற்றும், ஐம்புலக் காட்சியறிவில் நம்பிக்கையும், சட உலக உண்மையில் ஈடுபாடும் விளைகின்றன. ஐம்புல வேட்கையைத் தீர்த்தலும், உடலைப் பேணலும் வாழ்வின் பயன்களாகின்றன. இத்தகைய உலகப்பற்றே நம்மைக் கட்டுறுத்தி, அறிவை ஒளிமழுங்கச் செய்து, அடக்கத்தை ஓட்டிவிடுகிறது. இக்காரணத்தால் அச்சமும் கவலையும் மனதிற் குடி கொள்ள, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்சரியம் எனும் அசுரரது ஆட்சி நம்மிடம் நிலைக்கின்றது. இன்னும், நாம் உடலே எனும் கருத்து தடிப்பேறும் போது, ஆணவ வெறி மூளுகின்றது. ‘அஹங்காரம் சுராபானம்’ (கட்குடித்தல்) என்பர் ஆன்றோர். இவ்வெறியால் தீய குணங்கள் விளைகின்றன; அறம் முறிகின்றது. நாம் உடலோடு ஒன்றித்து நிற்றலில் உடலோடு தொடர்புற்றஎதையும் நம்மதாகப் பாராட்டும் தன்மை கிளர்கின்றது. உதாரணமாக, கருமமும் அதன் பயன்களும், உடைமையும், குடும்பமும் ஸமூகமும், நாடும் மனித இனமும் நம்மவை யென்ற பாவனை முற்றிக் காய்க்கும்; இதனால் அகங்காரம் நன்கு கனியும். நாம் இந்த சமூகத்தையோ நாட்டையோ சேர்ந்தவர் எனும் விரிந்த அகங்காரம் நமது உடலைப் பற்றியெழும் அகங்காரத்தைக் காட்டிலும் விஞ்சியிருக்கும், மிக்க கட்டுக்கு உள்ளாக்கும், மதிமயங்கி நெறிதவறிச் செல்லச் செய்யும். நமது தனிநலனைக் கருதிச் செய்யத் தயங்கும் பாதகங்களையும் நாட்டுக்காகவோ ஜாதிக்காகவோ ஸமூகத்திற்காகவோ நாணமின்றியும் களிப்போடும் தருக்கோடும் இழைத்து மகிழ்வதுண்டு அன்றோ?

இங்ஙனமாயின், உலகியல் நோக்கை ஒழித்து ஞான நோக்கினைப் பெறவழி யாது? நமது ஆன்ம உணர்வைப் பெருக்கவேண்டும், உடலுணர்ச்சியையும் மன உணர்ச்சியையும் ஆணவ உணர்ச்சியையும் சுருக்கவேண்டும். நாம் உண்மையில் ஆன்மாக்களே; ஆன்மா உடலுமன்று, மனமுமன்று; இவை தம்மைத் தாமே அறிய முடியாதன, ஆன்மாவால் அறியப்படுவன. ஆன்மா தன்னொளியால் தன்னையும் பிறவற்றையும் அறியவல்ல ஒரு நித்தியப்பொருள்; அது இயல்பால் தூய்மை வாய்ந்தது, ஆனந்த மயமானது, பிறப்பிறப்புகளும் விகாரங்களும் பந்தமும் அற்றது. வெம்மை குளிர்களும், பிணி நலன்களும் பலமுடைமை பலவீனங்களும், வளர்ச்சி தேய்வுகளும், இன்ப துன்பங்களும், பிறப்பிறப்புகளும், இருள் ஒளிகளும் உடலுலகத்தையும் மன உலகத்தையும் சார்ந்தனவே. உடலோடும் மனத்தோடும் நாம்ஒன்றுபடும் போது, நாம் அவற்றுக்கு ஆளாகிறோம்: நம்மை மெய்யான ஆன்மசொரூபமாக உணரும்போது, துயரங்களும் பந்தங்களும் வரையறைகளும் நம்மைவிட்டுப் பறந்தொழிகின்றன; இதுவே விடுபட்ட நிலை, முத்திநிலை.

இம் முத்திநிலையே வாழ்க்கையின் முடிவிடம், நமது பிறவிப்பயன். ஆன்ம ஞானம் அடையும்போதே, உடம்பினைப் பெற்றநோக்கம் நிறைவெய்துகிறது. இந்த உண்மையை அறிந்து நம்பிப் பற்ற நினைக்கும் போதே, உலகியல் நோக்கு மறைய, ஞானநோக்கு உதிக்கின்றது; ஆதாவது ஞானத்தைக் குறியாகக் கொண்டே, நமது வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு செயலையும் சொல்லையும் நினைவையும் அதை நோக்கி எய்ய முயல்கிறோம். உடலையோ மனத்தையோ இவ்வுலகப் பொருளையோ இன்பத்தையோ ஆற்றலையோ அதற்காக மதிக்கும் பழக்கத்தைக் கைவிட்டு, ஞானசாதனமாகும் அளவிற்கோ, ஞானத்திற்காகவோ மதித்து வருகிறோம். உடலையும் மனத்தையும் புறக்கணிப்பதும் இல்லை, துயருறுத்தலும் இல்லை, இம்மைப்பொருள்கட்கும் சுகங்கட்கும் சக்திகட்குமாக வாழ ஒருப்படோம். இவையொன்றிலும் மூழ்கி விடவும் மாழ்கிவிடவும் (மதிமயங்கி விடவும்)

இடங்கொடோம். அறத்தின் மாண்பிற்காக வும் ஞானத்தின் மாண்பிற்காகவும் அவற்றில் எதையும் அவசியம் வரின் பலியிடவும் பின்னிடோம். அறத்தின் துணை ஞானத்திற்கே இன்றியமையாததாகும், இம்மைப்பேற்றுக் கன்று. இக்காரணத்தால் உலக வாழ்விலே வெற்றியை நாடுவோன் அறிந்தே அறத் தாற்றை விடுத்துச் செல்வான். ஆனல் ஞானக்குறிக்கோளை நாடுவோன் அறப்பண்புகளை விட வொண்ணுதவனுவான்.

அன்றியும், உலகப் பற்று நம்மைவிட்டு நீங்கும் போதே, நமது அறிவும் சங்கற்ப சக்தியும் நேர்மைக்குப் புறம்பாகாது சஞ்சரிக்கும்; பற்று நிகழும்வரை, அவ்விரண்டும் அவ்வரக்கனுக்கு அஞ்சிப் பணிந்தொழுகும்; அவனது விருப்பத்திற்கிசைந்த யுக்திகளையே அறிவு சரமாரியாகத் தொடுக்கும்; அறிவையே உற்ற துணையாகக் கருதும் நம்மை அது வஞ்சித்து ஏமாற்றும். ஆதலின் உலகப்பற்று மாய்ந்து உள்ளம் தூயதாகும் போது, நமது ஆன்மாவைப்பற்றிய உணர்வு உதயமாகும்; அப்போது நமக்கும் எல்லா ஆன்மாக்கட்கும் ஆன்மாவாக ஒளிரும் பரமான்மாவான இறைவனுக்கும் உள்ள தொடர்பு புலனுகும்; அவ் வாயிலாக (இறைவன் மூலம்) நாமும் பிறரும் (பிற ஆன்மாக்களும்) சமமாவதை உணர்வோம். இறைவன் மீது பக்தி தலையெடுக்கவே, ஐம்புலப்பற்று தேய்கிறது; நன்னயக்குறடு நம்மைக் கவ்விக் கொண்டிருக்கும் தன்மை சற்றே நெகிழ, நாம் நழுவி வெளிவருகிறேம்; உள்ளத்தூய்மை மிகவே, நமது உண்மையுணர்வு விரிவடைகிறது, நல்ல பண்புகள் நம்மிடம் தாமே ஒளிரத் தொடங்குகின்றன; வரவர, நம்மைப்போன்றே பிறரை நேசிக்கும் அன்பு முதிர்கின்றது. இந்த அன்பே உலகச் சாந்தி நிலையக்கட்டடத்தை எழுப்புவதற் கேற்ற ஆதாரமாகும்.

இத்தகைய அன்பை உணர்தற்குக் கடவுளிடத்தும் ஆன்மாவிடத்தும் நம்பிக்கை வேண்டுமோ? ஞானநோக்கு இன்றியே பரோபகாரச் சிந்தனைக்குக் கொள்கலமாக விளங்கிய உத்தமர் உளரன்றே? மன்னுயிர்க்காகத் தம் செல்வத்தையும் பதவியையும் இன்னுயிரையும் ஈந்து உவக்கும் மாண்பினர்க்கு ஞான இச்சையோ இறைவன் மீது பக்தியோ இன்றியமையாதது என்பது எவ்வாறு? இவ்வண்ணம் வினவுவார் சிலர். அத்தகைய அன்புச் செல்வர் ஒரு சிலர் வாழ்ந்ததையோ வாழ்வதையோ இல்லையெனல் ஒண்ணுது. எனினும், அப்பெறலரும் செல்வரும், தூல உலகையோ அறிவையோ ஒட்டியெழும் உறவினும் மிக ஆழ்ந்த நுண்ணிய உறவினை ஏனைய மக்கள்மீது கொண்டிருத்தலும் (உணர்ந்திருத்தலும்) கட்டாயமே. ஏனெனில் சாதாரணமாக, யாதேனும் ஓர் உறவு இல்லாத வழி அன்பு எழுவதில்லை; மேலும் ஒருவன் பிறரிடம் பாவிக்கும் உறவின் இயல்பைப் பொறுத்தே அவனது அன்பின் தூய்மையும் ஆழமும் அமைகின்றன; ஒருவர்க்கு மற்றொருவர்மீது உறவு தோன்றுதற்கு இருவரையும் ஒன்ருகப் பிணைக்கும் பொதுவான தொடர்பு ஒன்று வேண்டும்; அத்தகைய பிணைப்பிற்குக் குடும்பம் ஸமூகம் ஜாதி நாடு போன்ற ஒரு பொதுத் தொடர்பு எங்கணும் அவசியமாகக் காணப்படுகின்றது. அன்றியும் ஸமூக வாழ்க்கையில் உடல் பொருளாதாரம் அரசியல் பண்பாடு அறிவு ஒழுக்கம் மதம் இவற்றைப்பற்றிய பல வகைப் பொது நலன்களிலுள்ள ஈடுபாடே மக்களை ஒன்ருகப் பிணைக்க வல்லதாகின்றது. தனி மனிதன் தனக்கும் ஸமூகத்திற்குமுள்ள பொதுத் தொடர்பை உணர்வதில் உள்ள தீவிரத்தன்மைக்கு ஏற்றவாறு, அவனுக்கு ஸமூகத்தின் மீதுள்ள அன்பும் வலுக்கின்றது. அத்தீவிரத்தன்மையோ பொதுத் தொடர்பின் இயல்பைப் பொறுத்ததாகின்றது. உடல் நலப்பற்றினல் வரும் பொதுத் தொடர்பைவிடப் பண்பாட்டுப் பற்றினல் எழும் தொடர்பு ஆழமுடையதாகும்; அதுபோன்றே ஒழுக்கப்பற்றினுலும் மதப்பற்றினுலும் வரும் பொதுத் தொடர்பு அரசியற் பற்றினுலும் பொருளாதரப்பற்றினுலும் கொள்ளும் தொடர்பைவிட ஆழமும் உறுதியும் உடையதாகும். தேசாபிமானி யொருவன் தேசப்பற்றுடைய பிறருக்காகத் தமது உற்ருருறவினரையும் கைவிடத் துணிவான்; அதேபோன்று, மதக் கொள்கையொன்றிற் பற்றுடையான் தனது குடும்பத்தார் மீதும் ஸமூகத்தார் மீதும் நாட்டினர் மீதும் கொள்ளும் உறவைக் காட்டிலும் பன்மடங்கு வலிமையார்ந்த உறவால் அதே கொள்கையுடையாரொடு பிணைக்கப்படுகிருன்; ஆனல் ஒரே மதத்திலும் ஒரே தெய்வத்திலும் உள்ள பற்றினல் மக்கள் ஒன்ருகப் பிணைக்கப்படும் அளவிற்கு வேறு எவ்விதத் தொடர்பும் மனிதர்க்குள் ஆழ்ந்த ஒற்றுமை யுணர்ச்சியைப் பிறப்பிப்பதில்லை. இந்நிலையிலிருந்து நோக்குங்கால் ஒரு பரோபகாரிக்கு மன்னுயிர் மீதுள்ள பற்றுக்கும் அடிப்படையாக ஒரு பொதுத் தொடர்பு இருத்தல் இன்றியமையாததாயிருக்கின்றது; இறைவனே எல்லா உயிர்கட்கும் பொதுத் தந்தையாதலாலும், அனைத்துயிர்களும் இறைவனேடு சொருபத்தில் ஒன்

றாதலாலும் எல்லா ஆன்மாக்களும் சகோதரராவார் என்ற சமயக் கருத்திலுள்ள நம்பிக்கையே சமயப் பற்றுடையார்க்குப் பொதுத் தொடர்பை ஊட்டுகின்றது. சமயத்திலே நம்பிக்கையற்றார்க்கு அனைவரையும் சமமாகவும் சகோதரராகவும் பாவிக்கும் உணர்ச்சி எழுமாயின், அது மக்களின் உடல்களிலும் மனங்களிலும் காணப்படும் ஒற்றுமைகளையே அடிப்படையாகக் கொண்டதாதல் வேண்டும். எல்லா மக்கட்கும் உடல்களும் மனங்களும் ஒரே மாதிரி அமைந்துள்ளன என்று உடல் நூலாரும் உயிர் நூலாரும் கூறும் முடிபினைத் தழுவியெழும் சமரச உணர்ச்சி ஆன்ம ஞானத்தால் எழும் சமரச உணர்ச்சியைப் போலும், அதில் நம்பிக்கையுடையார்க்குள் எழும் சமரச உணர்ச்சியைப் போலும், பிணைக்கும் சக்தி மிக்கதாகுமா என்பதை அறிஞர் சிந்தித்தல் வேண்டும். சமயப்பற்றும் இறைவனிடத்து நம்பிக்கையும் இல்லாதாரிடத்தும் ஆழ்ந்த அன்பு மன்னுயிர்மீது தோன்றுமாயின், அன்னார் அறிவின் துணையால் ஆன்ம ஒருமையை இன்னதென வரையறுத்துணர மாட்டாது போயினும், தமது உள்ளத்தூய்மையால் ஒரு வகையாகப் பொதுப்பட உணர்கின்றார் என்பதே பொருந்தும். சாதாரணமாக மக்களை ஒன்றாகப் பிணைத்து ஸமூக உணர்ச்சியை ஊட்டுவது சுயநலனே; உடல்நிலை பொருளாதாரநிலை அரசியல்நிலை, பண்பாட்டுநிலை இவற்றில் யாதேனும் ஒன்றுக்கோ பலவற்றிற்கோ விளையும் நலனே. ஆனால் மன்னுயிர் மீது அன்பு பெருகுபவனிடம் இத்தகைய சுயநலன் இருப்பதில்லை. அன்றியும், நிறம் உருவம், பால், வயது, அழகு, பலம், சிறப்பு, பதவி, ஜாதி, கொள்கை முதலிய வேறுபாடுகள் யாவும் அத்தகைய அன்பைத் தகைவதில்லை. ஆதலின் இத்தகைய உடலைப்பற்றிய மனத்தைப் பற்றிய வேறுபாடுகள் அனைத்திற்குள்ளும் ஊடுருவி நின்றும், அவையனைத்திற்கும் அப்பாலாகியும் உள்ள ஆன்ம ஒருமையைப் பற்றிய உணர்ச்சியே தூய ஆழ்ந்த அன்பிற்கு ஆதாரமாகும். இந்த ஆன்மாவின் இருப்பையும், அதற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும் அறிவுக்கண்ணால் நோக்கிக்கண்டு, பின் முறையாக அவ்வுண்மைகளை அனுபூதிக் காட்சிக்கு இலக்காக்க முயலுவார்க்கே, மன்னுயிர் மீது கங்கு கரையற்ற காரணமற்ற அன்பு தலையெடுத்தல் இயல்பாகும், பிறர்க்கன்று.

இவ்வுண்மை சம்பந்தமாகவும் சிலர் எதிர் வழக்குரைப்பர். மக்கட்குள்ள பொதுவான சுயநலன்களை அடிப்படையாகக் கொண்டு பரஸ்பர அன்பை உண்டாக்கவும் வளர்க்கவும் இயலாதா? ஞான உணர்வை எல்லோரிடத்தும் எழுப்புவதினும், சுயநலனைப் போற்றுதற்கே பரநலனைக் கருதுதல் இன்றியமையாதது எனும் உணர்ச்சியை உண்டாக்குதல் பழக்கத்தில் மிக எளிதும் போதியதும் அன்றோ? தற்காலத்தே ஓரிடத்திலிருந்து வெகு தொலையிலுள்ள வேறோரிடம் விரைவிற் செல்லுதற்கும், வெகு தொலையிலுள்ளார்க்குக் கருத்தை விரைவில் அறிவிப்பதற்கும் வசதிகள் தாராளமாக அமைந்திருத்தலின், உலக மக்கள் பலரும் முன்னினும் மிக அருகே இருப்பதாக உணர்கின்றனர்; பற்பல நாட்டினரது சுய நலன்களும் ஒன்றோடொன்று தொடர்புற்றுள்ளன என்பதும், ஆதலின் ஒரு நாடு வாழப் பிறநாடுகள் வாழ்தல் அவசியம் என்பதும் எளிதே அனுபவத்திலே விளங்குகின்றன. இவ்வுணர்ச்சியைத் துணைக்கொண்டு ஒருமையுணர்ச்சியை உலகமக்கட்குள் உதிக்கச் செய்வது எளிதன்றோ? தனி நலன்களையும் ஸமூக நலன்களையும் பேணுதற்குச் சிறந்த வழியாவது, மனிதக்குலம் முழுமைக்கும் வேண்டிய நலனை நாடுதலே; பல நாட்டு மக்களும் உலகப் பொது நலனுக்காகப் பிரியத்தோடு ஒத்துழைத்தலே ஒவ்வொரு நாட்டின் தனி நலனுக்கும் உலக சாந்திக்கும் சாதனமாகும். இவ்வாறு வழக்காடும் ஸமூகத் தலைவரும் அரசியல் நிபுணரும் உளர் என்பது உண்மையே; ஆனால் இவர்களது வழக்கு புரையோடிய வழக்கேயாகும். மனிதக் குலத்தின் பொது நலத்தைச் சுய நலத்திற்காகக் கருதும் முயற்சி வேறு, காரணம் பற்றாது மன்னுயிர்மீதெழும் தூய அன்பு வேறு. ஒருவர் பிறரது நலன் கருதுதற்கு ஆதாரமாவது சுய நலப்பற்றே; இம் மறைவான சுய நலன் ஒருபோதும் தூய பரநலனாகாது. பல நாடுகளும் ஒத்துழைத்தலும், உலகப் பொது நலன் கருதி மனம் ஒன்றுபட்டு வாழ்தலும் ஓரளவிற்கு உலகச் சாந்தியை நாடத் துணையாகும் என்பதில் ஐயமில்லை; இத்துணையைப் புறக்கணியாது பேணுதலும் வேண்டத்தக்கதே; ஆனால் உலகப் போக்கிலே பல முறையும் இம்மை நலன்களை அனைவரும் சம அளவிற்குப் பங்கிட்டுக் கொள்ளுதல் இயலாததாகின்றது; ஒருவரது இலாபம் பிறர்க்கு நஷ்டமாகவும், ஒருவரது நஷ்டம் பிறர்க்கு இலாபமாகவும் முடிகின்றது. ஆதலின் சுய நலனிற்காகவே பிறரது நலனைக் கருதும் மனநிலை உள்ளவரை யாதேனும் ஒருவகையிலே சுயநல முரண்பாடு விளைதல் தடுக்கவொண்ணாததாகும்.

மன்னுயிரைத் தன்னுயிர் போலக் கருதுதல் வேண்டும் என்பது ஆன்றோரது வாக்கு. தனது நலனைக் கவனிப்பது போலப் பிறரது நலனையும் ஒருவன் கவனித்தல் வேண்டும் என்னும் அற ஒழுக்கத்தைமட்டும் குறிப்பதன்று இது; ஞானப் பேற்றினால் அனைத்துயிர்மீதும் காரணம் பற்றாதெழும் தூய அன்பொழுக்கத்தை (அருள் நெறியைக்) குறிப்பதே இது. தனித்தனி ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும் பரந்துள்ள பரமான்மாவோடு ஒன்றாந் தன்மையை உணரும் ஞானமே மன்னுயிர் மீதெழும் தூய அன்பிற்கு ஆதாரமாகும்; அத்தகைய உண்மையை அறிவுக் கண்ணாற் கண்டு நம்பிக்கை கொள்ளலும் அந்த அன்பைப் பெறப் பெருந் தூண்டுகோலாகும். இம்மாதிரியான அன்பு மக்களது இதயத்துக் குடிகொள்ளும் அளவிற்கே உலக அமைதி யென்பதும் அடையப் பெறுவதாகும். ஆதலின், உலக அமைதிக்கும், அதற்கு இன்றியமையாது வேண்டப்படும் அருளொழுக்கத்திற்கும், வேராய் அமைவது உலகியல் நோக்கன்று, ஞான நோக்கே யாகும்.

அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்

E. V. சோமசுந்தரம், B. A.

அத்தியாயம் 10

இறை அருளுக்கு நன்றி

இடைவிடா உழைப்பிற்கே நீ பிறந்திருக்கும்போது ஏன் ஓய்வைத் தேடுகிறாய்?

ஆறுதலை நாடாதே. பொறுமையுடன் அனைத்தையும் சகித்திருக்கவே ஆயத்தமாக இரு. இன்பத்துடன் இருக்க விரும்பாது இறைவனுக்காகத் துன்பங்களைத் தாங்குவதற்கே தயாராக இரு.

எப்போதும் கிடைக்கும் என்றிருந்தால், ஆன்மீக இன்பத்தையும், ஆறுதலையும் விரும்பி உலகியல் அமைந்த மனிதர்களிலும் கூட எவன் தான் ஏற்கமாட்டான்?

ஏனெனில் ஆன்மீக ஆறுதல் உலகஇன்பங்கள் அனைத்தையும், ஊன் உடல் நுகர்ச்சி இன்பங்கள் அனைத்தையும் விட மிகவுயர்ந்த பேரின்பம் தருவதாகும்.

உலக இன்பங்கள் அனைத்தும், தூய்மையற்றதாகவோ அல்லது வீணானவையாகவோ உள. ஆன்மீக இன்பங்கள் தான் உண்மையானவையாகவும், மாறா மகிழ்ச்சி தரக்கூடியனவாகவும் உள. ஏனெனில் அவ்வின்பநிலை இறைவனால் தூய உள்ளங்களிலே ஊற்றப்படுவது. அம்மகிழ்ச்சி அறத்தினின்றும் எழுகின்றது

ஆனால் எம்மனிதனும் தனது இச்சைப்படியோ, இடைவிடாதோ இவ்வான்மீக ஆறுதல்களைப் பெறமுடியாது. ஏனெனில் தீமைக்கவர்ச்சியில் சிக்கும் நேரம் அருகேயே இருந்து அடிக்கடி துன்புறுத்துகிறது.

2. இறையருள் நம்முள் எழுவதற்கு மிகப் பெருந்தடைகள் உள. அவையாவன: பொய்யான மனச் சுதந்திரமும், தன்னிடத்துப் பெரு நம்பிக்கை கொள்ளுதலும்.

தெய்விக ஆறுதலான அருளை இறைவன் அளிப்பது பெரும் பேறாகும். ஆனால் அவ்வருளுக்கு நன்றி பாராட்டி, அதை இறைவனுக்கே சமர்ப்பித்து அவ்வருள் பெறும் நேரத்தில் இறைவனையே வணங்கிக்கொண்டு இராமல் மனிதன் தவறு செய்கிறான்.

இறை அருளால் பெறப்படும் நன்கொடைகள் நம்முள்ளே வெள்ளப்பெருக் கெடுத்துப் புகுவது இல்லை. ஏனெனில் அவற்றை அளிப்பவனுக்கு நன்றி செலுத்தி அவற்றை முழுதும் மீண்டும் அவ்விறைவனாகிய நல ஊற்றுக்கே மீண்டும் போய்ச்சேரும்படி நாம் நடந்து கொள்ளுவதில்லை.

உண்மையில் சரிவர நன்றி செலுத்துவோனிடம் இவ்விறையருள் தங்கி நிற்கிறது. செருக்குக் கொண்டவரிடம் இருந்து அருள் பிரிக்கப்பட்டு அடக்கம் உடையோருக்கு வழக்கமாக அளிக்கப்படுகிறது.

3. மனக் கழிவிரக்கத்தை என்னிடம் இருந்து நீக்கிவிடக்கூடிய ஆறுதலை நான் கோரவில்லை. மனச் செருக்கை அளிக்கக் கூடிய சிந்தனையையோ தியானத்தையோ பாவிக்க விரும்பவில்லை.

ஏனெனில் மிகப் பெரியவை எல்லாம் தெய்வீகத்தன்மை உடையவை அல்ல. இனிமையானவை அனைத்தும் நல்லவையும் அல்ல. விருப்பங்கள் எல்லாம் தூய்மையானவை எனவும் முடியாது. நமக்குப் பிரியமானவை என்பனவெல்லாம் இறைவனுக்கும் பிடித்தவை என்று எண்ணலுமாகாது.

எப்போதும் வணக்கம் உடையோனுகவே இருக்கும்படி செய்யும் இறை அருளேயே விருப்புடன் ஏற்றுக் கொள்வேன். மேலும் மேலும் (என்னேயே பற்றி) அஞ்சும் தன்மையைத் தருவதும் தன்னேயே துறக்கத் தயாராகச் செய்வதுமான இறையருளேயே நாடிப் பெற்றுக் கொள்வேன்.

இறையருளாகிய பேற்றைப் பெறுவதால் அறிவு பெறுபவனும், அவ்வருளை அடிக்கடி இழப்பதால் பயிற்சி பெறுபவனும், தன்னிடம் நன்மை இருப்பதாகக் கருதமாட்டான். தனது வெறுமையையும், ஏழ்மையையும் அறிந்து ஒப்புக் கொள்வான்.

இறைவனுக்கு உரித்தானவற்றை இறைவனுக்கே செலுத்தி, உனக்கே உரியதை உன்னுடையதாகவே கருதுக. அதாவது, இறைவன் அளிக்கும் திருவருளுக்காக அவனுக்கு நன்றி செலுத்து; பாவங்களுக்கும் பாபத்தினுல் அடையும் தண்டனைக்கும் காரணம் நீயே என அறிந்து ஒப்புக் கொள்ளு.

4. உன்னை நீ எப்போதும் பணிவுடன் மிகத் தாழ்மையான இடத்தில் (நிலையில்) வைத்துக்கொள். அப்போது உனக்கு மிக உயர்ந்த நிலை உனக்கு அளிக்கப்படும்; ஏனெனில் மிகவுயர்ந்தது நிற்க, மிகத் தணிந்ததே ஆதாரமாக வேண்டியதாகும்.

இறைவனது முன்னிலையில் மிகத் தலைமையான பெரியோர்கள் யார் எனில், தங்களைப் பற்றி மிக மிக அற்பமாக நினைத்துப் பணிவுடன் இருப்பவர்களே. எவ்வளவுக்கு அவர்கள் தெய்வீகப் பெருமையுடன் விளங்குகிருர்களோ அவ்வளவு தங்களுக்குட் பணிவுடன் இருக்கிருர்கள்.

உண்மையும் தெய்வீக ஒளியும் நிரம்பியவர்கள், வீண் பெருமையை விரும்புவது இல்லை.

இறைவனிடம் உறுதியாக ஊன்றி நிலைத்து நிற்கும் உள்ளத்தோர் பெருமிதப்படவே முடியாது.

தம்மிடத்துள்ள நன்மை அனைத்தும் இறைவனிடமிருந்து வந்தன என்னும் அப்பெரியோர்கள் எச்சிறப்பு எய்தினும் தங்களேயே ஒருவரையொருவர் புகழ்ந்து கொள்ளரர். இறையருளில் நிலைத்து நிற்கும் பெருமையொன்றையே நாடுவார்கள். எல்லாப் பெருமைக்கும் இறைவனே காரணம் ஆதலின், அவனுக்கே புகழ் அனைத்தையும் இயல்பான உரிமையாக்கவும், அவனது மெய்யடியாரிடம் காணப்படும் நலன்கள் அனைத்திற்கும் காரணமாக அவனையே புகழவும் விரும்புவர்; அந்நிலையை நோக்கியே சதா சென்று கொண்டிருக்க முயல்வர்.

5. ஆதலால் மிகச்சிறு நன்மை பெறினும் அதற்காக இறைவனுக்கே நன்றி செலுத்து; அவ்வாறு ஒழுகி முன்னினும் மிக்க நலன் பெறுந்தகுதியுள்ளவனுக்கிக் கொள்.

நீ பெற்ற மிகச் சிறியதை மிகமிகப் பெரிய பேருகக் கருது. நீ பெறும் மிக அற்ப நலனையும் கூடச் சிறப்பான மதிப்புள்ளதாகக் கொள்.

அருளுபவனது மதிப்பினை நீ நினைத்தால், எவ்வளவு சிறு நலனும் சிறிதாகவோ மதிப்புக் குறைந்ததாகவோ மனதிற் படாது. ஏனெனில் அனைத்திற்கும் மேலான ஆண்டவன் அளிப்பது எதுவும் அற்பமாயிருத்தல் முடியாது.

துன்பங்களேயோ தண்டனைகளேயோ இறைவன் அளிப்பானுயினும், நாம் நன்றியே செலுத்த வேண்டும். ஏனெனில் அவர் அவ்வாறு செய்வது என்றைக்கும் நமது நன்மைக்கே யாகும்; யாது நமக்கு நேரிடினும், அவனது அனுமதியாலே அது நிகழ்வதாதலின் என்க.

இறைவன் அளிக்கும் திருவருளை இழக்காது வைத்திருக்க விரும்புவோன் தனக்குத் தரப்படும் திருவருளுக்காக நன்றி செலுத்துவானுக; தன்னிடமிருந்து நீக்கப்படும் போதும் பொறுமையுடன் இருப்பானுக. அந்த அருட்பேறு மீண்டும் தனக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பானுக; பெற்றபின் அதை இழந்து விடாமல் இருக்கவேண்டி அவன் மிகமிகக் கவனத்துடனும், பணிவுடனும் இருப்பானுக.

இன்பமாலை

காப்பு

வெண்பா

அருள்சேர்ந்த ஆக்கம் அனைத்தும் அளிக்கும்
தெருள்சேர்ந்த செல்வம் திணிக்கும் -
பொருள்சேர்ந்த
தேவி அருள்முதல்வன் செண்டருள்செய்
செங்கணன்என்
ஆவி அனையான் அடி

[ஆக்கம்–பெருக்கம். தெருள்–ஞானம். அனையான் – ஒத்தவன். கரிகாற் சோழனுக்குச் செண்டாயுதம் அருளினவன் விநாயகன். அவன் அதனால் வடஆரியரை வென்று இமயத்தில் தன்கொடியையுயர்த்தினன்.]

நூல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1. உலகு லாவிய புலவர் யாவரும் உளமு
றப்பெரி துள்ளுவார்
அலகு றுமியல் அயன ராஅமர் அரிபு
ராரிகள் நாடுவார்
இலகு சீர்அற உருவமாயென திதய வாவி
யில் நின்றருள்
விலகு றுதமெய் விமலை அம்பிகை விறல்
கெழும்பத கஞ்சமே.

(பொழிப்புரை) விளங்குகின்ற சிறப்புக்களை யுடைய தருமத்தின் வடிவமாகி எனது மனமாகிய தடாகத்தில் நிலை நின்றருள்கின்றவளும் நீக்கமில்லாத மெய்ப் பொருளாயிருப்பவளும் இயல்பாகவே எல்லாக் குற்றங்களும் நீங்கியவளும் ஆகிய அம்பிகையின் வெற்றி பொருந்திய பாத தாமரைகளை இவ்வுலகத்து விளங்கும் புலவர்களும் (விண்ணுலகங்களில் விளங்கும் தேவர்களும்) மனத்திற் பொருந்த மிகவுங் கருதுவார்கள்; அளவில்லாத கலியாண குணங்களையுடைய பிரமனும் ஆதிசேடன்மீது பள்ளிகொண்டருளும் திருமாலும் முப்புரங்களை யழித்த சிவபெருமானும், எய்தப் பெருமையால், இன்னும் ஆராய்ந்து கொண்டிருப்பர்; எ–று.

[அலகுறு இயல் அயன் அராஅமர் அரி புராரிகள் நாடுவார்–எனப் பிரிக்க. இலகு சீர் அற(ம்) உருவமாய் எனது இதயவாவியில் நின்றருள்—எனப் பிரிக்க.]

விருத்தி. உல்கு-மங்கலச் சொல்; புலவர் என்பது தேவர்க்கும் பெயர். 'புலவரைப் போற்றுது புத்தேளுலகு' என்பது காண்க. 'விபுதர்' என்னும் வடசொல் 'புலவர்' என்னும் பொருட்டாய் வடமொழியில் வழங்குவதும் உணர்க. 'பெரிதுள்ளுவார்' என்றது உள்ளியறிதலின் அருமை குறித்து நின்றது. முத்தேவருக்கும் கதி அகப்படாமையால், 'நாடுவார்' என்றும். 'கருதுவார்' என்பதும் ஒருகருத்து. மும்மூர்த்திகளும் தத்தம் இயல்பால் வலியராயினும், தேவி பாதங்களை நாடுந்தன்மையரே யாவர் என்பதும், அவ்வாறு நாடினலன்றி அவர் செய் தொழில் நிகழாது என்பதுந் தோன்ற, உரிய அடைமொழிகளுடன் சூட்டப்பட்டனர். அறமே இறுதியில் மேம்படுவதும் தலைகாப்பதும் பற்றி 'இலகு சீரறம்' எனப்பட்டது, 'அற வுருவமாய்' என்றது, தேவி முப்பத்திரண்டு அறங்களையுஞ் செய்தமையும், அவள் அறத்துக்குக் காரணமாகிய அருளை முழுவதும் கொண்டிருக்குந் தன்மையும், இவளது நியமமே அறமாய் விளங்குவதும், பிறவும் பற்றி என்க; முத்தேவர்க்கும் அரியளாயினும் பத்தர்க்கு எளியளாதலால், 'என திதயவாவியினின்றருள் விலகுறுத மெய் விமலை யம்பிகை' என்றும். "மெய் விமலை" என்றது தேவி உண்மையே வடிவானவள், உண்மையொழுக்கத்தால் அடையத் தக்கவள், விமலையென வழங்கப்படுந் தேவமாதர் பலர் உளராயினும் உண்மையாகிய 'விமலை' தேவியே யாவள் என்பனவும் பிறவும் பற்றி என்க, 'விமலை' என்ற சொல்லாற்றலான் தேவி மாசற்ற மனத்திலேயே தங்குவள் என்பதும் உணரப்படும். 'விறல்கெழும் பத கஞ்சம்' என்றது, தேவி தேவர்க்கெல்லாம் மேம்பட்டவள் என்பதும், யாவர்க்கும் வெற்றிக்கும் காரணமானவள் என்பதும், மகிடாசுரன் தாரகன் முதலிய அரக்கர்களை ஒவ்வோரவதாரங்களில் மிதித்து அழித்தமையால் இயல்பாகவே வெற்றி பொருந்திய பாதங்களையுடையவள் என்பதும் மாயையொருபொழுது வெல்வதனுல் வரும் வீடு பேற்றையுதவும் பாதங்களையுடையவள் என்பதும் பிறவும் விளங்கும் என்க. இவ்வாறு பிற செய்யுட்களும் உய்த்துணரப்படும். விரிவஞ்சிப் பிற செய்யுட்களுக்கு விரிவுரை கூறலமாயினும், பொழிப்புரையை நுணுகியாராய்வார்க்கு விரிபொருள் விளங்கும் என்னுங் கருத்துடையேம்

2. அலகி லாஉல கடைய வும்பெறும் அழகும்
ஆர்தரு வன்மையும்
நிலவு மாமன நினைவு மாய்அவிர் நிமலை
மாமலை யான்மகள்
குலவு தாமரை குழைத ரும்பத குணம்அ
றிந்துவ ணங்கிடும்
இலகு புண்ணியம் அலது வானவர் யாது
கொண்டுல காள்வரே.

(பொ—ரை.) அளவில்லாத உலகங்கள் முழுவதும் பெறும் அழகும், நிறைந்த வல்ல

மையும், விளங்கும் (உயிர்களது) சிறந்த மனங்களில் நிகழுங் கருத்துக்களும் ஆகி விளங்கும் மாசற்றவளும் பெரிய இமயமலையரசன் மகளும் ஆகிய பராசக்தியின், (மென்மை அழகு முதலியவற்ருல் ஒப்பாகாமையால்) விளங்குகின்ற செந்தாமரை மலர்களும் நீரில் நின்று (குழைகின்ற) மனம் வருந்துவதற்குக் காரணமான பாதங்களின் (அளவிறந்த) இயல்புகளேயும் நன்மைகளேயும் அறிந்து அவற்றை வணங்குவதனுல் வரும் (என்றும் விளங்கும்) புண்ணியத்தால் அல்லது தேவர்கள் (வேறு) எந்த வல்லமையால் தத்தம் உலகங்களே ஆளுவர்? எ—று.

[அடையவும்—முழுதும்.]

3. இனியமாகவி தவறிடாமொழி இயல்பெ
னும்புகழ் சால்மக(வு)
இனிவி ரும்பலம் எனவ ருந்திரு இவைமு
னயபயன்களும்
கனிவி ராயது மறை மணப்பது களித
ருந்திரு வாய்மலர் ;
பனிம லேக்குல மகள்அ ருட்செயல் பகர
வேறிலே பாரிலே.

(பொ—ரை) இனிமை பொருந்திய சிறந்த கவிதையும் குற்றமற்ற சொற்களும் (பலிதமுடைய சொற்களும்) குற்றம் அற்ற தன்மையால் பெறும் புகழ் மிகுந்த மக்களும் 'இனிமேல் விரும்பமாட்டோம்' என்று ஒருவர் சொல்லும்படி (வெறுக்க வெறுக்க) உண்டாகுஞ் செல்வமும் இவை முதலான பிற பயன்களும், கொவ்வைக்கனி போன்ற செந்நிறமுடையதும் (இன்கனிகளின் தன்மை கலந்ததும்) வேதங்கள் மணப்பதும் ஆகி மகிழ்ச்சியைத் தரும் சிறந்த வாயாகிய மலரையுடைய, குளிர்ந்த மலேயரசனுடைய குலமகளான தேவியின் அருட் செயலால் வருவனவாம் ; உலகில், சொல்லின், அவற்றுக்கு வேறு காரணம் இல்லே ; எ—று.

[கவி — புலமை. சால் — மிக்க. மகவு—பிள்ளே. விரும்பலம்—விரும்பமாட்டோம்-முன் ஆய—முதலான. பனிமலே—இமயமலே. பாரில்—உலகில்.]

4. இளமை யோடுயர் வசிய மோகனம்
எனஉ ரைத்தவை யாவையும்
வளமை மேலுற உதவி வாழ்வது வலிமை
சாலஅ ளிப்பவை
அளவு சாமளே அழகிமாமலே யரசன் ஆரு
யிர் ஆனவள்
துளவி னன்முத லவர்து தித்துயர் துரிசி
லாதப தங்களே.

(பொ-ரை) எவ்விடத்தும் கலந்து உறைகின்ற சாமளே என்னும் பெயரையுடையவளும் அழகுடையவளும் பெரிய மலேயரசனுக்கு அருமையான உயிரானவளும் ஆகிய தேவியின், துளசி மாலேயை அணியுந் திருமால் முதலிய தேவர்கள் துதித்துத் தம் நிலே மேம்படுவதற்குக் காரணமான எக்குற்றமும் இல்லாத பாதங்கள், இளமையையும் உயர்ந்த வசியம் மோகனம் ஆகருடணம் விந்துவேடணம் உச்சாடனம் பேதனம் ஸ்தம்பனம் மாரணம் என்று சொல்லப்பட்ட அட்ட சித்திகள் எல்லாவற்றையும் செல்வத்தையும் மிகுதியாகத் தந்து ஆயுள்வலிமையையும் மிகவும் அளிப்பவைகளாம் ; எ—று.

[சால-மிக. துளவினன்-துளசிமாலேயுடையவன் ; விஷ்ணு. துரிசு—குற்றம்.]

5. அடையும் ஓர்பதம் அரியமாதவம் அவிர்த
ரும்பல வாம்வினே
மிடைவ யாவையும் மதிபுனேந்தருள் விமலே
தன்னேய லாதிலே
நடையி னின்றிவண் ஒருவர் செய்வன
நாடின் அன்னவள் மின்னவிர்
இடையி னுள்பதம் இயையும் மாமறை,
இதுவ லாதிலே சொல்வதே.

(பொ—ரை) அடையப் பெறும் சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களில் எப்பதமும் [எந்நிலேயும்] செய்வதற்கு அரிய பெரிய தவமும் விளங்குகின்ற பல வாகிய செய்கைகளும் (அவற்றின் பயன்களும்) மிக அடைகின்ற பிறநலங்கள் யாவையும் சந்திரனேச் சிரத்திற் சூடி அருள்கின்ற மாசற்றவளான தேவியை அல்லாமல் இல்லே. நூல்களிற் சொல்லப்பட்ட ஒழுக்கத்தில் நின்று இவ்வுலகில் ஒருவர் செய்யும் (வழிபாடு முதலியனவாகிய) செய்கைகள் அனேத்தும், ஆராயின், மின்னலேப் போல விளங்கும் இருப்பையுடையவளான அத்தேவியின் பாதங்களேச் சென்றடையும், சிறந்த வேதங்கள் சொல்வது இது அல்லாமல் வேறு இல்லே ; எ—று.

[பதம்—பதவி, நிலே. அவிர்தரும்—விளங்கும். மிடைவ—நிறைகின்றன. இவண்—இங்கே ; இவ்வுலகில்]

6. ஒளியும் இல்லேயொர் உரனும் இல்லேநல்
உறுதி யில்லேஉ ரைத்திடில்
அளியும் இல்லேமன் அறிவும் இல்லேசொல்
அறமும் இல்லேமனத்திலே
தெளிவும் இல்லேபல் நினேவும் இல்லேயொர்
திறனும் இல்லேமன் இல்லேயே
வளியும் வானமும் எனநி கழ்ந்திடும் வரத
னுருயி ரன்றியே.

(பொ—ரை) உரைப்பதாயின், காற்றும் ஆகாயமும் எனேய பூதங்களுமாய் நிகழும் மேலோனுகிய சிவபெருமானது அருமையான உயிராகிய தேவியை அல்லாமல் ஒளி

யும் இல்லை, ஒருவன்மையும் இல்லை, நல்ல உறுதிப்பாடும் இல்லை, அருளும் இல்லை, மிகுந்த (பொருந்திய) அறிவும் இல்லை, மனத்திலே சொல்லப்படும் அறிவும் இல்லை, தெளிவும் இல்லை, பல நினைவுகளும் இல்லை, ஒரு செய்கைக் கூறும் இல்லை, (உறுதியாகவே இவை) இல்லை ; எ—று.

[இல்லை மன்—இல்லை. வரதன்—மேலோன்.]

7. நீடும் அம்புவி மாது தன்னொடு நீதிசேர்
கலைமங்கையும்
பீடு சார்பிற தேவமாதர்கள்பேணு மெய்
வலியோர்களும்
ஆடும் ஆர்அர வாளும் மாசடையாதி தேவி
தன் இன்னருள்
ஊடு லாவிடும்ஓர்கலைத்திற னோடு தஞ்
செயல் செய்வரே.

(பொ—ரை) அழகிய பெரிய பூமிதேவியும் நீதி பொருந்திய சரஸ்வதி தேவியும் பெருமை பொருந்திய பிற தெய்வப் பெண்களும் விரும்பப்படும் (அழியாதிருக்கத் தக்க) உடல் வலிமையுடையவர்களாகிய தேவர்களும் (உண்மையையே தமக்கு வல்லமையாக உடைய முனிவர்களும்) ஆடுகின்ற பொருந்திய பாம்புகளை அணிந்த கரிய சடாபாரத்தையுடையவளும் முதல்வியும் (எல்லாவற்றுக்கும் காரணமானவளும்) ஆகிய தேவியின் இனிய அருளாகிய சந்திரனகத்து விளங்கும் (இயங்கும்) ஒரு கிரணத்தின் வல்லமையைத் துணையாகக் கொண்டு தமக்குரிய செய்கைகளைச் செய்வர் ; எ—று.

[அம்—அழகிய. புவி மாது—பூமி தேவி. கலைமங்கை—சரஸ்வதி. பீடு ஆர்—பெருமை பொருந்திய. அரவு—பாம்பு. கலை—ஒளிக்கதிர், கிரணம்.]

இந்துமத ஸாரம்

(105-ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக இன்னொரு இந்துமதக் கருத்தும் கூற வேண்டியதேயாகும். ஒவ்வோர் உலகமும் ஒவ்வோர் 'அதிஷ்டான தேவதை'க்கு உட்பட்டிருப்பதாகக் கூறுவர் ; அவ்வுலகம் அத் தேவதையின் பெயரைக் கொண்டே பன்முறையும் அழைக்கப்படுவதுண்டு. இம்முறைப்படி இரண்டாவது அட்டவணையிலுள்ள மேல் ஏழு உலகங்களும், முறையே அக்னி, வாயு, வருணன், ஆதித்தியன், இந்திரன் பிரஜாபதி, பிரம்மன் எனும் தேவதைகளின் ஆட்சிக்கு உட்பட்டிருத்தலைக் குறிப்பிடுகின்றன. அது போன்றே ஏனைய உலகங்கள் யாவும் வெவ்வேறு அதிஷ்டான தேவதைகட்கு உட்பட்டுள்ளன.

இந்துமதப்படி, சைதன்யமே (அறிவொளியே) பிரபஞ்ச முழுதும் பரவியுள்ள அழிவற்ற தத்துவமாகும். அக இயற்கையிலே அதைத் தன் வாயிலாக வெளிப்படுத்தும் நுண்ணியகருவியாவது சூக்கும பூதங்களால் (தன் மாத்திரைகளால்) ஆக்கப்பட்டுள்ள அந்தக்கரணமே. இதுவும், மூதன் முதலாக உண்டான அண்ட புருடனாகிய இரணிய கருப்பனின் உடலன்றி வேறில்லையாதலின், எங்கும் வியாபகமுடையதேயாம். செயல்களை இயற்றுதற்கு உதவும் தூலமான சடக் கருவியும் விராட் புருஷனின் உடல் வடிவாகி ஒரே முழுமையாகத் தொழிலாற்றி வருகின்றது ; அதுவும் தூல சடப் பிரபஞ்சம் முழுமையிலும் வியாபகமுடையது.

ஈசன் முதலில் இரணிய கருப்பனாகவும், பின் விராட் ஆகவும தோன்றுகிறான் ; பின்பு பற்பல மற்ற தேவதைகளாகவும் மற்றெல்லா ஜீவர்களாகவும் தன்னைத்தானே பிரித்துக் கொள்ளுகிறான். ஈசன் தனது மாயையால் பலவாகின்ற வகை இதுவே. ஒவ்வொரு ஜீவனும் தனக்கென வேறான ஓர் அகங்காரத்தைக் கொண்டவனாயினும், விராட் புருஷனின் ஒரு பகுதியேயாகும். ஒரு மனிதனுடைய தூல உடலிலே எண்ணிறந்த நுண்ணிய உயிர்க்கூடுகள் உறைவது போல, விராட் புருஷனது எங்கும் பரந்த உடலிலும் எண்ணிறந்த ஜீவர்கள் உறைகின்றனர். இதுவே இந்துக்களின் துணிகரமான கருத்தாகும். சைதன்யமும் (உணர்வும்), உயிரும் மனமும் எனப்படும் சூக்குமக் கருவியும், செயலிற்கு வேண்டிய தூல, சடக்கருவியும் —இம் மூன்றும் எங்கும் வியாபகமுள்ளனவாகக் கருதப் படுதலின், இயற்கையின் எந்தப் பகுதியிலும் ஒரு ஜீவன் தோன்றுவதற்கு அவசியமான யாவும் அடங்கியுள்ளன என்பது உண்மையே.

ஆன்மா.

ஓர் உயிருள்ள பொருள் அறிவுற்றனவும் அறிவற்றனவுமான பகுதிகளின் தொகுதியேயாகும். அவ்வுயிர்ப் பொருளில் உள்ள அறிவெனும் பொருளே சாஸ்திரங்களால் ஜீவனெனும் பெயரால் குறிப்பிட்டு அழைக்கப்படுகிறது.

மனம், இந்திரியங்கள், தூலவுடல் இம் மூன்றினும் வேறாகவுள்ளது ஆன்மா; அது ஓர் உயிர்ப் பொருளின் தனியான சுதந்திர மான பகுதியாகும். அதுவே வீட்டின் உடையவன். அதுவே இரதத்தின் மீதுள்ள சாரதி (ஒப்பிடுக: கட உபநி 1-3-3). அது (அந்தர் ஜோதி) சுயஞ்சோதி வடிவமானது (ஒப்பிடுக: பிருஹ. உபநி. 4-3-7). உணர்வே அதன் இருப்பின் ஸாரமாகும். ஓர் உயிருள்ள பொருளின் அமைப்பில் அடங்கியுள்ள உணர்வு மயமான பொருள் அது ஒன்றே. ஆதலின் இதுவே தானென தன்மையில் ஜீவனாவது.

இந்த ஆன்மாவுக்கு மூன்று உடல்கள் மிகத்தூல நிலையிலிருந்து மிக நுண்ணிய நிலை வரை உறைகளாக அமைந்துள்ளன; அவை யாவன: தூல உடல், சூக்கும உடல், காரண உடல் எனும் மூன்றும். தூலவுடல் தூல பூதங்களாலும், சூக்குமவுடல் சூக்கும பூதங்களாகிய தன் மாத்திரைகளாலும் ஆக்கப் பட்டுள்ளன. இக்காரணம் பற்றியே இவை பௌதிகங்கள்—அதாவது, பூதங்களால் ஆக்கப்பட்டவைகள் — எனப்படும். காரண உடல் அவியக்கத்தின் வெளிப்படையாக விளங்காத அகண்டாகார சக்தியின் ஒருசிறு பகுதியேயாகும்; பூதங்களும் பௌதிகங்களும், விளங்கக் காணப்படும் அதன் விதங்களேயாம் (பிரகாரங்களாம்). அவியக்தமும் அதன் விதங்களும் உணர்வற்றனவாம்: ஆதலால் தூல சூக்கும காரண உடல்கள் மூன்றும் அவ்வண்ணமேயாம்.

காரண உடலிலே ஒருயிரின் சிறப்பியல்புகளும் சார்புகளும் விதை நிலையிலே அடங்கியுள்ளன. விதைக்கும் மரத்திற்கும் காரண காரிய சம்பந்தம் இருப்பதுபோல, இந்த உடல் அவ்வுயிரின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாய் அமைகின்றது. இக் காரணம் பற்றியே அது அப்பெயர் பெறுவதாயிற்று.

சூக்கும உடலிலே, நாம் முந்தியதோர் அத்தியாயத்திற் கூறியபடி, விஞ்ஞானமய மனோமய பிராணமய கோசங்களாகிற மூன்று அறைகளும் அடங்கியுள்ளன. இவை முறையே அறிதல், கருதுதல், உயிர்ப்பு எனும் மூன்று தொழில்கட்கும் நிலைக்களமாகின்றன. விஞ்ஞானமய கோசத்தில் புத்தியும் ஐந்து ஞானேந்திரியங்களும் அடங்கியுள்ளன; மனோமய கோசத்தில் மனமும் ஐந்து ஞானேந்திரியங்களும், பிராணமய கோசத்தில் ஐந்து பிராணன்களும் ஐந்து கருமேந்திரியங்களும் அடங்கியுள்ளன. இவையனைத்தும் ஜீவனது சுவாதீனத்தில் அமைந்துள்ள நுண்ணிய கருமேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் ஆகும்.

(தொடரும்)

இயற்கை அழகு

காலையில் ஆகாயம் நிர்மலமாய் இருக்கின்றது. பறவைகள் எழுந்து மரக்கிளைகளில் உட்கார்ந்து இனிமையாகச் சப்திக்கின்றன. இளங்காற்று குளிர்ச்சியாக வீசி உடலைக் களிப்பிக்கின்றது. ரம்மியமான நீலநிற வானம் கீழ்த்திசையில் சிவக்கின்றது. மேகங்கள் சுற்றிலும் சிவந்த கங்குகள் தரித்திருக்கும் சித்திர அழகை எத்தகைய ஓவியமும் வரையமுடியாது. இத்தகைய கோலமிட்ட வானில் கதிரவன் அக்கினிப் பந்தெனக் கிரணங்களை வீசிக் கொண்டு தோன்றுகிறான். இக்காட்சியைக் கண்டு, கவனிக்கும் எம்மானிடனுடைய உள்ளமும் புளகாங்கிதப்படாமல் இருக்க முடியாது. ஆத்மா உடலினின்று வெளிச் சென்று வனப்பு மிகுந்த கடவுளின் சிருஷ்டியுடன் ஒன்றுபடுகின்றது எனலாம். இக்காட்சியை மனத்தால் கிரஹிக்கும் ஒருவன் அதை அனுபவிக்கும் அளவு தனக்குப் பொருள் வறுமையிருந்தால் அவ்வறுமையை மறக்கின்றான், உடல் நோயிருந்தால் அந்நோயை மறக்கின்றான், வாழ்க்கைத் துன்பங்கள் இருந்தால் துன்பங்களை மறக்கின்றான், இயற்கையழகு மானிடனுக்கு இவ்வாறு வறுமை, நோய், துன்பம் இவற்றினின்று விடுதலை கொடுக்கின்றது. மனம் இன்பம் ததும்பி நிற்கின்றது.

இவ்வாறு துக்கத்தினின்று விடுவித்து இன்பத்தில் ஈடுபடுத்தும் இயற்கையழகுகள் எண்ணிறந்தவை நம்மைச்சூழ்ந்துள்ளன. காலைக் கதிரவனுக்கு ஓர் அழகுள்ளதுபோல் மாலைக் கதிரவனுக்கு மற்றொரு அழகுண்டு. ஒரு ஆறு சலசலவென்று குளிர்ந்தநீருடன் ஓடிக்கொண்டு, அதன் இரு கரைகளிலும் அதை அணைத்து ஆலிங்கனம் செய்வதுபோன்று மரங்களும், செடிகளும், இலைகளும், பூக்களும்,வளர்ந்துள்ள காட்சி மானிடன் உள்ளத்தில் உவகையைப் பெருக்குகின்றது. அழகிய வர்ணங்கள் பலவுள்ள பூச்செடிகள் நிறைந்த தோட்டம், பச்சைக் கம்பளம் பரப்பியது போன்றபுற்றரை,உயிரூட்டும் பைங்கழனி,

தாமரை மலரும் தடாகம், பரந்து வளர்ந்து குளிர்ந்த நிழல் பரப்பும் கானகம், இடையில் மரஞ் செடிகளும் உச்சியில் மேகங்களும் சூழ்ந்துள்ள உயரியமலை, எண்ணற்ற விளக்குகள் சுற்றியுள்ள பரந்த நீல வானம், தண்மையில் தன்னிகரற்ற நிலா இரவு, ஓயாது கர்ஜித்து நிலத்தை நோக்கி அலைபெருக்கிக் கரைகாணாது பரந்து கிடக்கும் கடல், ஓய்வின்றி உயரவிருந்து கொட்டிச் சுழன்று ஓடும் நீர்வீழ்ச்சி, இவை போன்றவற்றைக் கருதினால், இந்த ஜகத்தை சிருஷ்டித்தவன் தன் ஆனந்தக் கருணை மிகுதியினால் அழகையே எங்கெங்கும் எக்காலமும் கண்டு மானிடன் களிக்குமாறு கொட்டியிருக்கின்றான் எனத் தோன்றுகிறது.

எந்த மானிடனுடைய குறிக்கோளும் இன்பம் அடைவதே. ஒருவன் அல்லும் பகலும் ஓடி உழைத்துப் பணம் ஈட்டிக் குவிப்பதும், இன்பம் அதனால் அடையலாம் என்ற எண்ணத்தாலே. ஆனால் பணம் பெருகப் பெருக இன்பம் பெரும்பாலும் குறைகின்றது. பல உபாயங்களைக் கையாண்டு பதவி மேற் பதவியடைவதும் இன்பத்தை நாடியே ஆயினும், பதவி கைக்கெட்டியதும் இன்பம் கானல் நீரென மறைகிறது. அரசனின் பொன்கிரீடம் முட்கிரீடம் போன்றது என்ற மூதுரையை நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால் நாம் தேடாமலே, உழைக்காமலே, இன்பம் அடையுமாறு சிருஷ்டிகர்த்தா தன் கருணைப் பெருக்கினால் எண்ணற்ற இயற்கையழகுகளை நம்மைச் சூழ விட்டிருக்கின்றார். ஆனால் நம்மிற் பெரும்பாலோர் இத்தகைய அளவற்ற செல்வத்தை அனுபவியாதிருக்கிறோம். இச் செல்வத்தை ஒருவனுக்கென்ற தனிஉரிமை தாளிடவில்லை. எல்லாருக்கும் எவ்விடத்தும் எக்காலத்தும் இது திறந்து வரவேற்கின்றது. பொருளே இல்லாத பரம ஏழையையும் செல்வவானுக்க இயற்கையழகு காத்திருக்கின்றது. அவன் தனது வாழ்க்கையில் துன்பத்தை மறந்து, உடலுணர்ச்சியைக் கூட மறந்து, இன்ப சொரூபமாக ஆக்கிக் களிக்கக் கடவுள் ஓர் ஒப்பற்ற, அளவற்ற, அழிவற்ற, தனி உரிமையற்ற, இயற்கையழகுச் செல்வத்தை ஈந்திருக்கிறார்.

துக்கம் கலவாத இன்பத்தை இயற்கையழகின் மூலமாக அடைவது மட்டுமல்ல. ஆழ்ந்து சிந்தித்தால் இயற்கையழகு ஈசுவரனுடைய கமல அடிகளில் மானிடனுடைய மனத்தை லயிக்கச் செய்யவும் சக்தியுள்ளது. மாணிக்கம் போன்று பிரகாசித்துக்கொண்டு சின்னஞ்சிறு புல்லின்மேல் நிற்கும் சின்னஞ் சிறு நீர்த்துளி முதல் ஒப்பற்ற சுடர்கள் கொண்ட எல்லையற்ற நீல வானம் வரை சிருஷ்டித்தவன்பால் மனம் சிந்தித்து நாடுகின்றது. அவனே மனம் அழகுச்சொரூபியாகக் காட்சி கண்டு பேரானந்தம் அடைகின்றது. இயற்கையழகில் மனத்தை ஈடுபடுத்துகின்றவன் இச் சிருஷ்டி முழுதையும் ஒரு பரம் பொருளின் வனப்புத் தோற்றமாகியகாட்சியில் தன்னைமறந்து களிக்கின்றான். 'நான்' என்ற அஹம்பாவம் மறைகின்றது. ஈசுவரன் ஒருவனே வனப்பு வடிவெடுத்து நிறைந்து மனத்தை ஆட் கொள்கின்றான். இயற்கையில் ஊன்றி நோக்கும் மானிடனுக்கு எங்கும் அழகு தென்படுகிறது. அதன் மூலம் எங்கும் அவன் ஈசனைக் காண்கிறான். கண்ணன் அர்ஜுனனுக்கு விச்வரூப தரிசனம் தந்ததைப் போல், இயற்கை அழகின் மூலம் விச்வரூப மணிவண்ண தரிசனம் எவருக்கும் எக்காலும் எவ்விடமும் அளிக்கின்றான். அழகின் மெய்த்தன்மைகளையும் வாழ்க்கைப் பிரயோகங்களையும் பின்னர் ஆராய்வோம்.

—S. சிவராமன், M.A., L.T.

ஆலய வழிபாடு

நாவலர்

உடம்பே ஆலயம்

நமது உடம்பே ஆலயமும் அதில் உறையும் ஆன்மாவே இறைவனுமாம். எனவே, இவ்வுடம்பின் வாயிலாக ஆன்ம ஞானத்தை எய்துவதே வீடுபேறு (முத்தி) ஆகும். இவ்வுண்மையை உணர்த்தும் பொருட்டே முன்னோர் நமது உடம்பின் அமைதிக்கு ஏற்ப ஆலயங்களை அமைத்துள்ளார்கள். நம் உடம்பில் உள்ள இதயத்துக்கு ஒப்பாகக் கருப்பக்கிரகமும் இதயத்துநிலவும் ஆன்மாவுக்கு ஒப்பாகக் கடவுள் விக்கிரகமும் ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, ஆலயங்களில் சென்று வழிபட்டுவரும் பயிற்சி ஆன்மஞான அடைவிற்கு ஏதுவாம். ஆலயஅமைதியுண்மை அறியாதார்க்கும் பயிற்சி மேலீட்டால் மனவொருமையும் ஆன்மானுசந்தானத்துக்கு உரிய தகுதிப்பாடும் உண்டாதல் திண்ணமாகையால், ஆலயவழிபாடு எவ்வாற்றானும் இன்றியமையாததாம்.

விக்கிரக மாண்பு

பரமான்மாவாகிய கடவுள் எங்கும் நிறைந்த பொருள். அதன் அறிகுறியாக விக்கிரகங்களை வணங்கினும், அவை பரமான்ம வடிவமாம் என்னும் தெளிவு (நம்பிக்கை) உறுதிப்பட வேண்டும். உருவங்களுக்கும் கடவுளுக்கும் வேற்றுமை தெரியாதநிலையில், வழிபாடு பயன்பட்டதாகிறது. கல் என்றும் செம்பு என்றும் தோன்றும் உணர்ச்சி—விக்கிரகவுணர்ச்சி—உடையார்க்குக் கடவுளுணர்ச்சி உண்டாவது அருமை.

தேவாலயங்களில் நாம் இறைவனுக்கு அர்ப்பிக்கத் தக்கவை உடல், பொருள், ஆவி மூன்றுமேயாம். என்றது என்னையெனில், அம்மூன்றையும் இறைவனுக்கே உரியனவாகச் செய்து அவற்றில் சிறிதும் பற்று இன்றிப் பத்தி ஒன்றிலேயே பற்றுற்று நிற்பதாம் என்க. செல்வத்திற் பற்றுக் கொண்டிருப்பவர் அதனை இறைவனுக்கு அளிப்பதனுல் சிறிதும் பயன் இல்லை. செல்வத்தில் பற்று இன்றி வாழ்வதே அதனை இறைவனுக்கு ஈடுசெய்ததாம். ஆலயங்களில் நிவேதனப் பொருள் அளிக்கவேண்டும் என்பது பொருள்களில் நமக்கிருக்கும் பற்று முழுவதும் விடல் வேண்டும் என்பதையே குறிப்பாக உணர்த்துகின்றது. இதனை உய்த்து உணராமல் சிலபல பொருள்களை இறைவனுக்கு வழி பாட்டுப் பொருளாக அளித்து விட்டு அத்துடன் தம் கடமை முடிந்தது என்று கருதுபவர் பேதையரேயாவர். வழிபாட்டின் நோக்கம் கைங்கரியங்கள் அல்ல, அவற்றின்வாயிலாக உள்ளத்தை இறைவன் மாட்டு ஒன்றுபடுத்துவது ஆகும். இறைவன்பால் உள்ளம் ஒன்றுபடுத்தும் ஆற்றல் உடையவர்க்கு எத்தகைய கருமங்களும் வேண்டப்படுவன அல்ல. உள்ளத்தை இறைவனிடத்து வழிப்படுத்துவதே வழிபாடு என்பதன் பொருள் என்க. இவ் வழிபாட்டின் பயனுக உயிர் (ஆன்மா) இறைவனிடம் இரண்டறக் கலக்கும் பரமுத்தி நிலை தலைவரும் என்பது கருதியே ஆலய வழிபாடு ஏற்படுத்தப் பெற்றுள்ளது. இக்காலத்து அவ்வுண்மை அறவே மறக்கப்பட்டு விட்டது. பேராலயங்கள் எல்லாம் வெறுங்கன்ம நிலையங்களாகவும், ஆலயப் பிரவேசம் அர்ச்சனை முதலியவற்றுக்காகப் பிறர்பொருளைக் கவர்வதற்கு உரிய பெருட் பறிநிலையங்களாகவும் காணப்படுவது மிக மிக வருந்தத் தக்கதாம்.

வேதகாலம்

ஆலயவழிபாடு மிகப் பிற்பட்ட காலத்தே தான் தோன்றியது என்பது பலர் கொள்கை; புத்தபெருமான் காலத்துக்குப் பிறகே ஆலய வழிபாடு ஊற்றம் பெற்றது எனலாம். அவன் ஞர்க்குப்பின் பல பௌத்தாலயங்கள் எழுந்தன. புத்தமதம் வீழ்ச்சி அடைந்த பின்னர்ப் பல பௌத்தாலயங்கள் இந்து ஆலயங்களாக மாற்றப்பட்டன என்பர் பலர். இராமாயண காலத்தில் சூரியவமிச அரசர்கள் திருமாலைக் கோயிலமைத்து வழிபட்டதாகத் தெரிகின்றது. 'தேஹோ தேவாலய' என்பது முதலிய சுருதிகளால் ஆலயவழிபாடு வேதகாலத்தே ஒருவாறு அரும்பத் தொடங்கியது என்று கொள்ளலாகும். பொருந்துமாறு (யுக்தி) கருதுவோமாயினும், கடவுள் உண்டென்ற கொள்கை மனிதனிடத்து எழுந்தகாலத்தே, காணப் பெருத கடவுளை இலிங்கத்தின் (அறிகுறியின்) வாயிலாக வழிபடும் விருப்பம் எழுவது இயல்பாகையால், அக்கால முதற்கொண்டே ஆலயவழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என அறியலாகும். உருவத் தோற்றத்தின் பின்னரே பெயர்த் தோற்றம் உண்டாவது முறைமையாதலால், இராமன், கந்தன், சிவன் விஷ்ணு, இந்திரன் முதலிய பெயர்கள் உபநிடதங்களில் தோன்று முன்பே உருவ வழிபாடு தோன்றியிருக்கவேண்டும். இப்பெயர்கள் உருவங்களைக் குறியாது தெய்வத்தின் ஒவ்வோர் ஆற்றல் நிலையைக் (சத்தியைக்) குறிக்குமெனக் கூறினும், அச்சத்திகளை வணங்குவோர் அவற்றிற்குத் தக்க உருவங்களையும் நாளடைவில் கருதுவது இயல்பாகையாலும் உருவ வழிபாடு வேதகாலத்தே அரும்பியது என்பதும் பிற்காலத்து வலியுற்றது என்பதும் ஓர்ந்து உணரப்படும்.

வழிபாடும் ஒழுக்கமும்

வழிபாடு ஒழுக்கம் உடையவர்க்கே பயன் தரத் தக்கது. ஒழுக்கம் என்பது ஒன்றே மக்களைப் பிற உயிர்க் கூட்டங்களில் நின்றும் உயர் பகுதியாகப் பிரிக்கும் சிறப்புடையது. மனிதன் உலகில் எந்த நன்மையை யெய்த வேண்டிடினும், ஒழுக்கமே முதன் முதலாக வேண்டற்பாலது; தீங்கை விரும்பும் ஒருவனுக்கு ஒழுக்கமின்மை ஒன்றே உதவியாம். ஒழுக்கமாவது ஒருவன் தனக்கும் பிறர்க்கும் எவ்வகையாலும் தீங்கு உருவண்ணம் ஒழுகுவதாம் (வாழ்வதாம்). பிறர்க்குத் துன்பம் நேருமாயின் தந்நலம் கருதாது பிறர் நலம்பேணுவதே சான்றோரொழுக்கம் எனப்படும்.

வழிபாடு முத்திப் பேற்றுக்கு வாயில் ஆகையால், முதன்முதல் ஒழுக்கம் உறுதிப்படவேண்டும். ஒழுக்கம் இல்லாதவர்களும்

ஆலயந் தொழுவார்களாயின், உள்ளம் நன்னெறியில் ஒழுகத் தொடங்கும். எனினும், அவ்வொழுக்கம் உறுதிப்பட்டுத் தீ நெறிகள் முற்றும் அடைக்கப்பட்ட பின்பே வழிபாட்டின் பயன் தலைப்படும் என்பது ஒருதலை.

வழிபாட்டின் இன்றியமையாமை

உலகியல் நெறிகளிற் சென்று அல்லும் பகலும் இயற்கையில் (மாயையில்) தோய்ந்து அல்லல் உறும் மக்கட்கு வாழ்வில் அமைதியும் வாழ்வு முடிந்த பின் செல்லும் நிலையில் அமைதியும் வேண்டும் அன்றோ? நம் உயிர் உடம்பை உதறித் தள்ளிவிட்டு ஓடியபின் அவ்வுயிர் மேலும் துன்பநிலையில் இருப்பதை ஒருவரும் விரும்புகிலர். இறந்தபின் என்னுமோ என்ற கவலை காரணமாகவே மக்கள் சாக்காட்டுக்கு மிக மிக அஞ்சுகின்றனர். கரும்பின் பயனாகிய சாற்றைப் பயன்படுத்திக் கொண்டவர் கருப்பஞ் செத்தைகள் எரியும்பொழுது வருந்தமாட்டார்.

'கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார், துரும்பெழுந்து வேங்காற்றுயாரண்டுழவார், வருந்தியுடம்பின் பயன் கொண்டார் கூற்றம்; வருங்காற் பரிவ திலர்'

—நாலடியார்

அதுபோல இவ்வுடம்பைப் பயன்படுத்திக் கொண்டவர்கள் உடம்பு அழியுங்காலை வருந்தார். உடம்பின் பயனாவது உத்தமனாகிய இறைவனைக் காண்பதுவே—இறைவனோடு இரண்டறக் கலந்து வாழ்வதுவே—ஆம். 'உடம்பினைப் பெற்றபயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்'

—ஞானக்குறள்

ஆதலால், இவ்வாழ்விலேயே உடம்பின் ஆக்கத்தை மட்டும் பேணாது உயிரின் ஊதியத்தையும் நாடல் வேண்டும். உயிரின் ஊதியம் எனப்படும் முத்திக்கு வழிஒன்றே. அவ்வழியாவது இறைவனிடத்தில் மனத்தை வழிப்படுத்தி ஒன்றுவித்து அவனோடு கலத்தல் ஆகும். உள்ளத்தைத் தியானத்தால் மட்டுமே இறைபால் வழிப்படுத்த இயலும். தொண்டு, தியாகம், யோகம், அனுசந்தானம், பத்தி முதலியவற்றின் வழியாகத் தியான நிலையைப் பெற்று இறைவழிபாடு ஆற்றலாகும். இவற்றுள் யோகம் ஞானம் என்னும் இரண்டும் தலைசிறந்த உபாயங்கள் ஆயினும், உலகியலில் ஈடுபட்ட எல்லார்க்கும் அவற்றை மேற்கொள்ளுதல் இயலாது. ஆகவே, ஆலயவழிபாடும் பத்திநெறியும் இறைத்தொண்டும் உலகியலார்க்கு இன்றியமையாதவை. பிறர்க்குச் செய்யும் உதவியும் பற்றற்று நிகழுமாயின், இறைத்தொண்டாம். ஆலய வழிபாடு பத்தியை உறுதிப்படுத்தும், இறைத்தொண்டு நிகழ்வதற்கு ஏதுவுமாம். ஆலயவழிபாடு உறுதிப்படவே தியானத்துக்கு உரிய மனநிலை எளிதில் ஏற்படும். தியானத்தால் முத்திநிலை கைகூடுவது திண்ணமாகையால், உலகியலார்க்கெல்லாம் ஆலயவழிபாடு இன்றியமையாதது என்பது பெறப்படும். ஆகவே ஒவ்வொருவரும் தத்தமக்கு உரிய தொழில்களைச் செய்வதுடன் சின்னேரம் ஆயினும் ஆலயவழிபாட்டை மேற்கொள்ள வேண்டும்.

மானத பூசை

ஆலயங்களிற் சென்று வழிபட இயலாதவர்கள் ஓரிடத்து அமைதியாக இருந்து தம் மனத்தகத்தே ஓராலயத்தைக் கற்பனையாற் செய்து அதில் உபாசனைக்குரிய தெய்வத்தைக் கற்பித்து வழிபடலாகும். இவ்வழிபாடு மானத பூசை எனப்படும். மானத பூசை (அகவழிபாடு) எளிதில் தியான நிலையை அடைவிப்பதும் ஏனை ஆலயவழிபாட்டை விடச் சிறந்ததுமாம்; உபாசனைக்கு உருவங்களை விரும்பாதவர் தூய இறைநிலையில் உள்ளத்தை உய்த்து வழிபடல் சாலச் சிறந்தது. மேற் கூறியவற்றுள் ஏதேனும் ஒருவழிபாட்டு முறையை மேற்கொண்டு ஒழுகுபவர்களே இவ்வாழ்க்கையின் பயனை ஈட்ட முயல்பவர் ஆவர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அனுபவ வேதாந்தமும்

குருதேவரது விழாவன்று ஸ்ரீமத் ஸ்வாமி யதீஸ்வரானந்தர் இயற்றிய தலைமைச் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலக முழுதிற்காகவும் அவதரித்தவர். இக் காரணம் பற்றியே அவர் பற்பல மதங்களையும் பழகினர்; இந்துதப்படி அவர் வழிபட்டார், கிறிஸ்தவ மத அனுபூதி சாதனங்களைப் பழகினர், இஸ்லாம் மத முறைகளையும் பின்பற்றினர். அவை ஒவ்வொன்றின் வழியாகவும் அவர் கடவுளை உணர்ந்தவரானர். சண்டையும் சச்சரவும் மிக்க இக்காலத்திலே, எல்லா மதங்களும் ஒரே இலக்ஷியத்தைச் சாரும் வழிகளே என்

னும் மத ஒருமைச் செய்தியை, மத சமரச உண்மையை அவர் நமக்குப் புகட்டுகிறார். இதை நாம் மறவாது நினைந்து, சிரத்தையோடு பின்பற்றி வாழவேண்டும். மக்களின் மதங்கள் இறைவனைச் சார்தற்குரிய நெறிகளைப் போன்றன. நாம் இறைவனை அணுகும் போதே, நெறியைப் பின்வைத்து இலக்ஷிய மாகிய சச்சிதானந்தப் பரம்பொருளை நாடல் வேண்டும்.

குருதேவர் தமது உடலை நீத்துச் சில ஆண்டுகள் சென்றபின் சுவாமி விவேகாநந்தர் இந்தியாவின் அழிவற்ற ஞானோபதேசத்தை, குருதேவரது வாழ்வில் உயிர்கொண்டு ஒளிர்ந்த அந்த சாஸ்வத உபதேசத்தைப், போதிப்பதற்காக அமெரிக்க நாடு சென்றார். 1893-ம் ஆண்டிலே சிக்காகோவிலே நடைபெற்ற சமயப் பெருமன்றத்திலே அவ்வுபதேசத்தை வெளியிட்டார். சுவாமிகள்பால் மனங்கவரப் பெற்ற மனிதர்கள் அப்போது பலராயினர். அது முதல் வேதாந்த இயக்கம் மெல்ல மெல்ல ஒழுங்காக வளர்ந்து வந்துள்ளது. ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கையினின்றும் பெறக்கூடிய உயிருள்ள வேதாந்த போதனையை, உலகப் பொதுவான உபதேசத்தை, பெரும் புலமை வாய்ந்த அறிவாளிகள் ஆராய்ந்து கற்றுவருகின்றனர். தற்கால ஐரோப்பிய இலக்கியங்களை வாசிப்பீரானால், மேலை நாடுகளில் எத்தனை எழுத்தாளரும் சிந்தனையாளரும் தலைவர்களும் இவ்வுபதேசத்தின் கவர்ச்சிக்கு மேலும் மேலும் ஆளாகி வருகின்றனர் என்பதைக் காண்பீர். பதினாறு ஆண்டுகட்கு மேலாக மேலைநாடுகளில் நான் திரிந்து கொண்டிருந்த போது, இந்தியாவின் போதனைகளில் மேலும் மேலும் ஈடுபடுகின்ற மக்களின் தொகை நாளும் பெருகி வருவதை யான் எங்கணும் கண்டுள்ளேன்.

இம்மாதிரி இலக்ஷியங்கட்காக நம் இந்திய நாட்டுக் குழந்தைகளைப் பழக்கி வருகின்றோமா? நம் வாழ்க்கையிலே இதே இலக்ஷியங்களைப் பின்பற்றி வருகின்றோமா? இக்கேள்விகளை நமக்கே நாம் போட்டுத் தக்க பதிலுரைக்கும் கடமைக்கு உட்பட்டிருக்கிறோம். பல மேற்றிசை நூலாசிரியரும் எழுத்தாளரும் அறிஞரும் அப் போதனைகளைப் பாராட்டினர், இன்றும் பாராட்டி வருகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூவுலக வாழ்வை நீத்துப் பத்தாண்டுகள் கழிந்த பின் கீழை நாட்டுப் பண்பாட்டிலே பேரீடுபாடுற்ற மாக்ஸ் முல்லர் என்பார் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றி ஒரு நூல் வரைந்துள்ளனர். அவரை ஈடுபடச் செய்தது யாது? ஸ்ரீ ராமகிருஷ்ணரது உபதேச மொழிகளில் தமது உள்ளத்திற்கு உவந்தவற்றைக் கண்டது மன்றி, இலக்ஷக்கணக்கான மக்கட்கு நன்னம்பிக்கையை ஊட்டி நற்காலத்தை எதிர்பார்த்தற்குரிய வழியைக் காட்டக் கூடிய வலிமை அமைந்திருப்பதையும் அறிந்தார்.

உங்களிற் பலர், ரொமெயின் ரோலண்டு எனும் பேரறிஞர் எழுதியுள்ள வாடாப் புகழ்பெற்ற நூல்களை வாசித்திருப்பீர்கள் என்று யான் உறுதியாகக் கூறலாம். நான் அவரைக் கண்ட சமயம் தாம் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிய நூல்களில் ஈடுபட்டிருந்ததைப்பற்றிக் கூறினார்; அவரது போதனைகளைக் கசடறக் கற்றுத் தம் அறிவோடு ஒன்றுமாறு செய்த பின்னர், "ஸ்ரீ ராமகிருஷ்ணரது சரிதம்" "சுவாமி விவேகாநந்தரது சரிதமும், உலகப்பொதுவான உபதேசமும்" என்னும் நூல்களையும், இயற்றி வெளியிட்டார். அவரது மனதைக் கவர்ந்தது யாதெனில், வேறெவரையும் விட மிகப் பூரணமாகத் தம்முள்ளே இறைவனது முழுமையை உணர்ந்தார் என்பதே. மன்னுயிர்க்கிருந்த தாகத்தைத் தணிக்கும் நீரை அளித்தார் அவர் என்பதே, ரொமெயின் ரோலண்டு அவரைப் பற்றிக் கூறிய புகழுரை.

மேற்றிசையிற் பலர் 'இப் போதனைகளை மக்கள் இந்தியாவில் நம்புகின்றனரா?' என்று கேட்கின்றனர். அவர்கள் எதையும் அனுபவத்தில் கொண்டு வரும் இயல்புடையவர். முன்பு நமது நாடு அடிமையுற்றிருந்த காலத்தில் அவர்கள் 'நீங்கள் சநாதன தருமத்தைப் பெற்றிருப்பதாகக் கூறுகிறீர்களே. அந்தத் தருமம் உங்கட்குச் சுதந்திரத்தை அளிக்காது போயின், அதனால் என்ன பயன்?' என்று வினவி வந்தார். இப்போது நாம் சுதந்திரத்தை அடைந்து விட்டோமாதலின் அவர்கள் வேறொரு கேள்வியைக் கேட்கின்றனர்: 'சநாதன தர்மமும் அழிவற்ற இலக்ஷியங்களும் உம்மிடம் இருப்பதாகக் கூறுகின்றீரே; அவ்வாறாயின் உமது நாட்டில் அவ்வளவு தாழ்வு இருத்தல் எவ்வாறு இயலும்?' என்கின்றனர். இதற்குத்தக்க பதிலை நாம் உரைத்தல் வேண்டும்? இப்போதனைகளை நமது வாழ்க்கையில் உயிருற்று விளங்கச் செய்தல் வேண்டும். அப்போது தான் மேற்றிசையுலகில் நமது சொல்லிற்குச் செவி சாய்ப்பார்கள். குருதேவரது உபதேசத்தை அன்னிய நாடுகளிலே பரப்பும் உரிமை வாய்க்கப் பெற்ற நாங்கள், இங்கே

நமது சகோதர சகோதரிகளிலும், புதல்வர் புதல்வியர்களிலும் பெருந் தொகையினர் ஞான இலக்ஷியங்களை உட்கொண்டு, அவற்றைத் தம் வாழ்க்கையிலே விளங்கச் செய்வராயின், அவ்வழியாலே மிக்க பலத்தைப் பெறுவோம். அவர்கள் நம்மை இடித்துரைக்கின்றனர். அதற்கு ஆளாகாதவாறு நடந்து கொள்ள நாம் தயாராயுள்ளோமா?

மடத்தைச் சேர்ந்த முதிய துறவிகளாய நாங்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர் சீடர் பலரது திருவடியின் கீழ் அமர்ந்து கற்கும் அரிய பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். நாங்கள் பேலூரிலுள்ள தலை மடத்திற்குச் சென்றபோது அச் சீடர்கள் பலர் உயிரோடு வாழ்ந்து வந்ததைக் காணும் பேறு பெற்றோம். சில சமயம் அவர்கள் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்ததைக் கண்ணுற்று, சற்றே அசைவதால் எழும் ஒலியையும் உண்டு பண்ண மனந்துணியாதிருந்தோம். இன்னும், சில சமயம் அவர்கள், யாம் அதுவரை பார்த்திருந்தவர் அனைவரினும் மிக்க சுறுசுறுப்போடு உழைத்து வந்ததையும் கண்டுள்ளோம். இவ் வாழ்வில் உள்ள இரகசியம் யாது? ஸ்ரீ ராமகிருஷ்ணரது திருவடிக் கீழ் அமர்ந்திருந்த அவர்கள் பேருண்மையை அறிந்து கொண்டனர்; அவ்வுண்மையைத் தமது வாழ்வில் விளங்கச் செய்தனர். யாம் அவர்களை அணுகியபோது, அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாயிருந்தனர். சிலரிடத்து ஞானம் திகழ, வேறு சிலரிடத்து பக்தி திகழ்வதாயிற்று; இன்னும் சிலரிடத்து யோகநிலை விளங்கிற்று; அவர்கள் ஒவ்வொருவரும் தமது குருதேவர் தத்தம் பண்பிலே எல்லையற்ற விரிவுடையராயிருந்தார் எனவும் எமக்குக் கூறினர். அப்போது எமது சிறிய மனங்களால் சரியாக உணரமாட்டாத அவ் வியத்தகும் பெரியாரான குருதேவரது பெருமையை ஒரு கணப்பொழுது காணப் பெற்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரையும் விவேகானந்தரையும் இருவராக ஒரு நாளும் கருதுதல் கூடாதென அத்துறவோர் எமக்குப் போதித்தனர். இருவரும் ஒருயிரும் ஒரு சக்தியுமான ஒன்றின் இரு வடிவங்களே யாவர். குருதேவரது சரிதத்தை வாசித்திருப்பார்க்குப் பின்வரும் நிகழ்ச்சி தெரிந்திருக்கும்: தமது மஹா சமாதிக்கு முன்பு குருதேவர் தம்மிடமிருந்த சக்தியனைத்தையும் விவேகானந்தர்க்குத் தானம் செய்து விட்டு, பெருமூச் செறிந்து 'குழந்தாய், என்னிடமிருந்த அனைத்தையும் உனக்கு ஈந்து விட்டேன், யான் ஆண்டியாகி விட்டேன்' என்றனர். குருதேவரது சக்தியே தம்மை ஊருராக இழுத்துச் சென்றது என்று சுவாமி விவேகானந்தர் கூறினர்; அவர்க்கு ஞான ஆவேசம் ஊட்டி, அவரை உழைக்கச் செய்ததும் அச் சக்தியேயாகும். அவர் நிர்விகற்ப சமாதி நிலையைப் பெறத் துடித்துக் கொண்டிருந்தார்; ஆதலின் அவர் குருதேவரிடம் சென்று, நிர்விகற்ப சமாதி நிலையினைத் தமக்கு அருளும் படிக்கும், இடையிடையே பசிவாதை வந்தெய்தும் போது மட்டும் அது கலைந்து விவகார உலகினுக்கு நினைவு சற்றே மீளும்படிக்கும், மெய்யுணர்வில் நிலைக்கும் வரை அவ்வாறு உடலைப் போற்றும் படிக்கும் தான் பெறவேண்டும் என்றும் பிரார்த்தித்தார். குருதேவர் அதைக் கேட்டு நகைத்து, 'உனக்கு அத்வைத அனுபூதியின் இன்பம் வந்து சேரும்; ஆனால் உன்னால் நிறைவேற வேண்டிய பணியொன்று உள்ளது' என்றனர். சமாதி நிலையினின்றும் விவகார உலகிற்கு இறங்கிய பின்னும் அதே மெய்யுணர்வு நிலைத்திருக்குமென்றும், பரம்பொருளை அங்கிங்கெனதபடி எங்கும் காணலாகும் என்றும் குருதேவர் கூறினர். விவேகானந்தர் 'இறைவனே, இருப்பதெல்லாம் நீயே' என்னும் பாடலைப் பாடுவது வழக்கம். குருதேவர் அதனை உணர்ந்தனர்; விவேகானந்தரும் அதே உணர்வைப் பெற்றனர். நாம் அனைவரும் பரம்பொருளினிடத்து வாழ்கிறோம் என்பதையும், நாம் அதனிடமிருந்து வெளி வந்துள்ளோமாதலின் அதனிடமே மீளுவோம் என்பதையும் விவேகானந்தர் அனுபூதியால் உணர்ந்தார். விவேகானந்தரிடம் எழுந்த வாக்கும் தெய்வ வாக்கே, அங்ஙனமே ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாக்கு.

அவர் அமெரிக்காவுக்குச் சென்றபோது அவர் கூறியதாவது:—'என் சகோதரர்காள், நீங்கள் 'மதம்' என்று எதைக் கூறுகிறீர்கள் என்பதை யான் அறியேன். ஆனால் எனது நெஞ்சு (அன்பு) விரிந்திருப்பதை யான் உணர்கிறேன்; அது மிகப் பெரும் வல்லமை உடையதாயிற்று.'' உண்மையாகவே விவேகானந்தர் அப்போது அகண்ட விராட் புருடனுடைய சக்தியோடு ஒன்றான நிலையைப் பெற்றிருந்தார்.

எங்கட்கு விவேகானந்தரைப் பற்றி மற்றைய நேர் சீடர்கள் கூறியது இதுவே. அத்துறவிகள் எங்கட்கு அளித்த உபதேசமாவது: மதமாவது அனுபூதியே என்பது. மதம் என்பதைப்பற்றி நினைக்கும் போது பலர் சித்தாந்தங்களையும் கொள்கைகளையும்

கிரியைகளையும் சடங்குகளையும் கருதுகின்றனர். மதமாவது அனுபூதியே, மதமாவது மெய்யுணர்வே என்று குருதேவர் கூறுவர்; அதை வாழ்வாலும் விளக்குவர், அவரது சீடர்களும் அதே உண்மையை வாழ்வால் போதித்தனர். மதம் இன்னது என்பதை உண்மையாக உணர்ந்தவன் பகவானது சாந்நித்தியத்தைத் தன்னுள்ளே காண்பதுமன்றி வெளியே எல்லா உயிர்களிடத்தும் காண்பவனாவான். இதுவே உண்மையான மதம். இதுவே இலக்ஷியம், நமது சாஸ்திரங்களில் உள்ள மிக உயர்ந்த இலக்ஷியம் இதுவே. இந்த இலக்ஷியமே ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்தர் அவரது சீடர்கள் ஆகியோருடைய வாழ்க்கைகளில் உயிரோடு ஒளிரும்படிச் செய்யப்பட்டது. நாங்கள் அனைவரும் எம்மால் இயன்றவரை உயிருள்ளதாக்க முயன்று வருவதும் இந்த இலக்ஷியத்தையே.

இரு பெருங் குரவர்களான ஸ்ரீ ராமகிருஷ்ணரையும் விவேகானந்தரையும் ஒருவர் ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். முன்னவர் அரவமின்றி மழை நீரை ஒன்று சேர்க்கும் வெண் மேகம் ஆவார், பின்னவர் மழை நீரை இடி முழக்கத்தோடு நாற்றிசையும் பரப்பும் கரு மேகம் ஆவார். முற்கூறிய ஞான இலக்ஷியங்களை ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது ஆழ்ந்த சமாதியில் அனுபூதியால் உணர்ந்தார்; விவேகானந்தரோ தமது சொந்த அனுபூதி வலிமையாலும் வாழ்க்கை வலிமையாலும் உலக முழுதும் அவற்றைப் பரப்பினார். விவேகானந்தர் கூறிய மிகவுயர்ந்த உபதேசமாவது: ஒவ்வோர் ஆன்மாவும் உள்ளடங்கிய தெய்வத் தன்மையை உடையது; மனித வாழ்வின் இலக்ஷியமாவது, கருமத்தாலோ, பக்தியாலோ, ஞானத்தாலோ, யோகத்தாலோ அனைத்தையும் ஒன்று சேர்த்தோ-யாதேனும் ஒரு முறையால் வாழ்க்கையில் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே. இவ்வுபதேசத்தையே விவேகானந்தர் மேற்றிசைக்கு அளித்தார், இந்தியாவிலும் அதையே பறைபறைந்து நல்கினார்.

இந்த உபதேசத்தை நாம் எவ்வாறு அனுபூதியாக்குவது என்ற கேள்வி எழும். அதற்குப் பதில் பின்வருவது: கருமமும் பூஜையும் (வழிபாடும்) ஒன்றுக்கொன்று துணையாகச் செல்லவேண்டும் - இரண்டும் கைகோத்து உலாவ வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சீடர்களிடமிருந்து அடிக்கடி யாம் கேட்ட புத்திமதி இதுவே. பரம்பொருளை ஒவ்வொரு வடிவத்தும் நேரிற் கண்டு அனுபவத்திருத்தலின், விவேகானந்தர் கூறியதாவது:

“ஞான நெறியைப் பின் பற்றும்போது, நமது சொந்த ஞான நலனைப் பேணுவது மட்டும் அல்லாது உலக முழுதின் ஞான நலனையும் பேணல் வேண்டும்”.

பலர் எமது தொண்டுகளையும் ஸேவா நிலையங்களையும் மருத்துவச் சாலைகளையும் கல்வி நிலையங்களையும் பதிப்பக நிலையங்களையும் புகழ்கின்றனர். ஆனால் இத்தனை விதமான துறைகள் அனைத்திற்கும் அடிப்படையாய் அமையும் இரகசியம் யாது?

நான் என் நாட்டுக்குத் திரும்பியதும், ஹரித்துவாரத்தில் நடந்த கும்பமேலாவைக் காணப் பிரியப்பட்டேன்; அங்கே பல ‘மண்டலீசுவரர்’ களோடு (பல துறவிகள் வாழும் மடங்களின் தலைவர்களோடு) பழகும் பேறு பெற்றேன். அச்சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணரது பிறந்த நாளன்று ஒரு கூட்டம் கூடிற்று. பல மண்டலீசுவரர்கள் அதற்கு வந்திருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் பெற்ற மெய்ஞ்ஞான அனுபூதிகளின் நேர் விளைவாக அந்த ஸேவை (தொண்டு) உண்டாயிற்று என்று அவர்களில் ஒவ்வொருவரும் கூறினர். வைதிகத் துறவிகள் எமது சேவாசிரமங்களையும், ஆஸ்பத்திரிகளையும், மருத்துவச் சாலைகளையும் கண்டு நகைத்த காலமும் உண்டு. அவர்கள் எங்களை இழிவாகக் கருதி “இவர்கள் ‘பங்கி ஸாதுக்கள்’, இவர்கள் தோட்டிகளைப் போன்றவர்” என்று சொல்வதுண்டு. உண்மையிலே அந்த வசைச் சொல் இசைச் சொல்லாகவே ஆயிற்று. பல ஆண்டுகள் சென்ற பின்னர், அந்த வசை மறந்தது; மதத் தலைவர்களில் ஒருவர் ஒரு கூட்டத்தில் ‘யான் இளம் மாணவனாயிருந்தபோது, நோய்க்கு ஆளானேன், ஸேவாசிரமத்திற்கு வந்தேன்; அங்கே அவர்கள் எனக்கு வேண்டியதை இயற்றினர் நோயைத் தீர்த்தனர். நான் புகழ்பெற்ற போது, யான் மறுபடியும் நோய்க்கு ஆளாகி, அவர்களது ஸேவாசிரமத்திற்குச் சென்றேன்’ அவர்களது சிகிச்சையால் உடல் நலம் பெற்று மீண்டேன். எனது பெற்றோர்களிடமிருந்து பெறக்கூடிய கவனத்தினும் மிக்க கவனத்தை அவர்களிடமிருந்து பெற்றேன், என்று பேசினார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகாநந்தர் இருவரது அனுபூதி கொண்ட தூல வடிவமே அது என்றறிக. நம்மிற் சிலர் இறைவனைத் தந்தையாக வணங்குகிறோம். அதன் பயனாக நான் பகவானை உணர்வேனாயின், எல்லா மக்களும் ஒரே பகவானின் குழந்தைகளே என்பதை யாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

அதைச் செய்ய நம்மிடத்துத் திறமையுள்ளதா? நாம் இதை உணரும் ஆற்றலுள்ளவராதல் வேண்டும். நாம் அனைவரும் அகண்ட பரம்பொருளின் பகுதிகளே யாவோம். நாம் இதை நன்கு உணருவோமாயின், அந்த ஞான அனுபூதி மிக்க சத்தி வாய்ந்ததாகும். அதுவே விவேகாநந்தரது அனுபூதி.

விவேகாநந்தரது அத்வைதம் சோதனைக்கு உட்படுத்தப் பட்டதா வென்று கேட்பீராயின், 'ஆம்' என்பேன். உங்கள் கண்முன்னே கடவுள் திகழ்வதைக் காண்கிறீர்கள் என்று விவேகாநந்தர் சொல்லுகிறார். கடவுளை நாடி எங்கே ஓடுகிறீர் என்கிறார். குருதேவரது திருவடியில் அமர்ந்து விவேகாநந்தர் இந்த உண்மையை உணர்ந்தார்.

ஒருநாள் குருதேவர் சமாதியில் ஆழ்ந்துவிட்டார். அதே நிலையிலே சிறிது நேரம் இருந்தார். அவர் சாதாரண உலகிற்கு ஒரு சிறிது இறங்கியதும்—பலர் கூறுகிறபடி சாதாரண உலகிற்கு என்னவலே பொருத்தம் - அவர் கூறியதாவது : "பிறர்க்கு உதவி செய்வதாகவும், பிறர் மீது இரக்கம் காட்டுவதாகவும் ஜீவகாருண்யம் செலுத்துவதாகவும் ஏன் பேசுகிறீர்கள்? இரக்கமன்று, பிறர்க்கு உதவி செய்வதுமன்று, பிறர்க்குக் கருணையைக் காட்டுவதுமன்று. மனிதனிடத்து எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்குத் தொண்டு செய்வதே அது. விவேகாநந்தர் தமது சகோதர சீடர்களிடம் கூறியதாவது: "இன்று புதிய உபதேசம் எனக்குக் கிட்டியதைப் பார்த்தீர்களா? இதை உலக முழுவதும் பறையறையப் போகிறேன். 'மனிதனுக்குச் செய்யும் தொண்டு பகவானுக்குச் செய்யும் தொண்டே."

ஆதலின் இதுவே உபதேசம்; நாம் அனைவரும் இதை அறியவும் உணரவும் முயல வேண்டும். பசியாயிருப்பானது வடிவில் வருபவர் பகவானே. அப்போது அவனுக்கு வேண்டுவது உபதேசங்களல்ல. அவனுக்கு உணவளிக்கவும், தன் உடலை அவன் போஷிக்க உதவி செய்யவும் வேண்டும். பகவானே நோயாளி வடிவமாக வருபவர்; அவர்க்கு மருத்துவ சிகிச்சை யளித்து, உடல் நலம் மீளச் செய்க; உங்கட்குப் பிரியமிருப்பின் உபதேசமும் செய்யுங்கள். பசியாலும் நோயாலும் வருந்துவார்க்கு ஞான உபதேசமளித்தல் முறையன்று; பசித்தார்க்கு உணவளித்தலும், நோயுற்றார்க்கு மருந்தளித்தலும் செய்யத் தகுந்தனவாம். பலர் எழுதப் படிக்கவும் அறிவைச் சேகரிக்கவும் சந்தர்ப்பம் வாய்க்காத நிலையில் உள்ளனர்; அவர்கட்கு அறிவொளியைப் புகட்டுங்கள். ஆனால் தானங் கொடுப்பவராக அன்று, ஒரு வேலைக்காரராக, தொண்டராக அதைச் செய்யுங்கள். மனிதனிடத்து பகவான் வீற்றிருக்கின்றனர். துயரப்படுவார் ஆறுதலுக்காக உங்களிடம் வருகின்றனர். ஆரம்பத்தில் அவர்கட்கு ஞானோபதேசம் வேண்டாம். அவர்களிடம் அனுதாப மொழிகளைப் பேசுங்கள், அவர்கட்கு அனுதாபங் காட்டுங்கள், அவர்களோடு ஒருவாறு ஒன்றித்து நில்லுங்கள். நம்மில் எத்தனைபேர் இவற்றைச் செய்யத் தயாராயுள்ளார்.

ஞானப் பசியைத் தணிப்பதில் நீங்கள் வெற்றியடைந்துள்ளீர்களா? இப்பசியைத் தணிக்க அனுபூதியே வேண்டும்; மக்களின் நிலையைப்பற்றிச் சிந்தித்தும், கைகொடுத்து அவர்கட்கு உதவியும், உயர்ந்த இலஷியத்தை நோக்கி அவர்களை வழிநடத்திச் சென்றும், அப்பசியைத் தணிக்கலாகும். இதுவே அனுபவ வேதாந்தம். இதை அனுபூதியாக்க விருப்பமாயின், நமது உள்ளத்தைத் தூய்மையாக்குதற்காக ஏதாவது ஒரு வகையில் சாதனம் பழகுதல் நம் ஒவ்வொருவர்க்கும் அவசியம். மனிதனிடம் தெய்வம் குடிகொண்டிருப்பதை உணருங்கள். உங்கட்கு ஒழுங்கான பயிற்சியும், சரியான மனநிலையும் இல்லாவிடின் உங்களால் எவ்வாறு பணி செய்ய முடியும்? இங்கேதான் துறவிகட்குச் சம்பந்தம் ஏற்படுகின்றது.

கருமமும் வழிபாடும் கைகோத்து உலாவ வேண்டும். உங்கட்கு இஷ்டமானால் தன்னயமற்ற ஸேவா மார்க்கம், ஆத்ம விசாரணை மார்க்கம், யோக மார்க்கம் பக்திமார்க்கம் இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றுங்கள்; பரம்பொருள் உங்களுடைய நெஞ்சிலே குடிகொண்டிருப்பதை நாளடைவிலேனும் உணரும் திறமை பெறுவதற்கு வழிதேடுங்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணரது மகிமையைப் பாராட்டுவதற்காகக் கூடியிருக்கும் இன்று, அவர் எந்த இலஷியத்திற்காக வாழ்ந்தார் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும். விவேகாநந்தர் நமக்குக் கூறியருளியதாவது; "முதலில் நாமே தெய்வங்களாக ஆகிக்கொள்வோம்; அதன்பின் மனிதனிடத்து எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்குப் பணி செய்யுங்கள். பிறர்க்கும் உதவிசெய்வோமாக. தியானமும் கருமமும், மோனமும் சுறு சுறுப்பும்—இவ்விரண்டின் இணைப்பையும் இங்கே நீங்கள் காண்பீர்கள்.

நமக்கு இரண்டும் அவசியம், இரண்டு நதிகளும் ஒன்று சேரவேண்டும்; கங்கையும் யமுனையும் ஒன்றுகூடும் தூய ஸங்கமம் வேண்டும்.

நம்மால் இயன்றவரை தெய்வத்தன்மையொடு கூடிவாழ முயலுவோம்; நாமே முதலில் தெய்வத்தன்மை யுடையவராகுமாறு முயற்சி செய்வோம்; பிறரையும் தெய்வத்தன்மையுடையவராக்க உதவுவோம். இந்தப் புண்ணிய தினத்திலே இப்பெரிய உபதேசத்தை யாம் ஞாபகம் வைத்துக் கொள்வோமாக.

தூய கருத்துக்கள்

டி. ஆர். ராமநாத சாஸ்திரி. B. O. L.

[கல்யாணிலிருந்து மொழிபெயர்த்தது.]

தன் உதவியே சிறந்த உதவி

கிரீஸ் நாட்டில் பேரறிஞர் 'ஜீனோ'வின் கல்லூரியில் 'கிலேந்திஸ்' என்ற ஏழை வாலிபன் பயின்று கொண்டிருந்தான். அவன் ஓர் கிழிந்த ஆடையையே நாள்தோறும் அணிந்து பள்ளி சென்றான். ஆனால் நாள்தோறும் கொடுக்கவேண்டிய சம்பளத்தைமட்டும் தவறாது கொடுத்து வந்தான். படிப்பில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்த 'கிலேந்திஸ்' மீது மற்ற மாணவர்கட்கு அதிகமான பொறாமை இருந்தது. நல்ல ஆடையைக் கூட அணிய இயலாத அவன் எவ்வித தம் சீமான்களைப்போல் அபராதமின்றிச் சம்பளத்தைச் செலுத்தி வந்தான் என்பது எல்லோருக்கும் விந்தையாயிருந்தது.

பொறாமையும் சேர்ந்தது; 'கிலேந்திஸ்' திருடித்தான் சம்பளம் செலுத்துகிறான்' என்று அவர்கள் எண்ணினர். நீதி மன்றத்தில் 'அவன் திருடன்' என வழக்கும் தொடர்ந்தனர்.

'ஐயா நான் குற்றமற்றவன். இதை நிரூபிக்க இரு சாட்சிகள் உளர்' என்றான் கிலேந்திஸ் நீதிபதி முன்பு.

ஒரு தோட்டக்காரன் வந்தான். 'என் தோட்டத்தில் நாள்தோறும் கிலேந்திஸ் தண்ணீரைக் கிணற்றினின்றும் இழுத்துச் செடிகளுக்குப் பாய்ச்சுகிறான். நான் கொஞ்சம் கூலி கொடுக்கிறேன்' என்றான்.

ஒரு கிழவி வந்தாள். 'ஐயா! என் வீட்டில் உதவி செய்ய எவரும் இல்லை. நானோ திறமையற்றவள். இந்தப் பையன் தினமும் வந்து கோதுமையை அரைத்துக் கொடுக்கிறான். நான் அதற்காகக் கூலிகொடுக்கிறேன்' என்றாள்.

இங்ஙனம் உடலுழைப்பால் பெற்ற தொகையைக் கொண்டு தன் வாழ்க்கையை நடத்திக் கல்விச்சாலைச் சம்பளத்தையும் கிலேந்திஸ் கொடுக்கிறான் என்பது தெளிவாயிற்று.

நீதிபதி மகிழ்ந்து கிலேந்திஸைப் புகழ்ந்தார். அவனுக்குப்பொருளுதவிசெய்து அவன் உடலுழைப்பின்றிக் கல்வி பயில ஏற்பாடுகளைச் செய்ய விரும்பினார்.

கிலேந்திஸ் பிறரிடம் உதவிபெற்றுக் கல்வி பயில விரும்பவில்லை. உடலுழைப்பையே சிறந்த உதவியாகக்கருதினான்.

ஜீனோ அறிஞர் அவனைப் புகழ்ந்தார்.

10

ஏற்றுக்கொண்டால் தான் வசைச்சொற்கள்

ஸ்ரீ புத்த தேவரிடம் ஓர் அந்தணர் சரணடைந்து சீடரானார். அவருடைய உறவினரான ஓர் அந்தணருக்கு இது பிடிக்கவில்லை. மிகுந்த சினத்துடன் புத்ததேவரிடம் வந்தார். தன்னால் முடிந்தமட்டில் மனமாரத் திட்டினார். புத்ததேவர் அவற்றைச் சிறிதும் கேளாதவர்போல் பேசாதிருந்துவிட்டார். அந்தணர் களைத்துப்போனார். பேசாது ஓய்ந்த நிலையிலிருந்த அந்தணரிடம் அமைதியுடன் புத்தர் 'பெரியோரே! உம் இல்லத்திற்கு எப்போதாகிலும் விருந்தினர் வருவதுண்டா?' என வினவினார். 'ஏன்? பன்முறைகள் வந்திருக்கின்றனர்' என்று விடை கிடைத்தது. 'அவர்கட்கு விருந்தளித்ததும் உண்டா?' என்றார், மறுபடியும் புத்தர். 'ஆகா' என்றார் அந்தணர். 'நீர் கொடுத்த பொருள்களை விருந்தாளி ஏற்காது இருந்துவிட்டால் என்னசெய்வீர்?' என்றார் புத்தர்.

'இது ஒரு பெரிய வினவா? என்ன செய்வேனே? நம் பொருள்களை ஏற்காவிடில் நமக்கு என்ன குறைவு? நம் பொருள்கள் நம் இல்லத்திலேயே இருந்து விடட்டுமே? இதற்காகக் கவலை ஏன்?' என்று கூறினர் அந்தணர்.

'சரி! நீர் விருந்தினரான எனக்கு வசைச் சொற்களை மனமார அளித்தீர். அவற்றை நான் சிறிதும் ஏற்கவில்லை. ஆதலால் அச் சொற்கள் எல்லாவற்றையும் நீரே திரும்பப் பெற்றுச் செல்லலாம். நானும் சினங் கொண்டு வசை மொழிகளை உமக்கு அளித்தால், உம்முடையவற்றை ஏற்றதாகப் பொருள் ஏற்பட்டுவிடும். அதற்காகத்தான் மௌனமாக இருந்துவிட்டேன்' என்றார் புத்தர்.

அந்தணர் நாணினர். தாமும் புத்தரின் மாணவரானர்.

11

விந்தையான தியாகம்

சைதன்யரின் இல்லற வாழ்க்கைப் பெயர் நிமாயி பண்டிதர். ஒரு நாள் அவர் படகில் ஏறி எங்கோ சென்று கொண்டிருந்தார். அவர் கையில் அவர் இயற்றிய நியாய சாஸ்திர நூல் ஒன்று இருந்தது, நிமாயி பண்டிதரின் தோழர் ரகுநாத பண்டிதரும் அன்று கூட விருந்தார். ரகுநாதருடைய வேண்டுகோளிற்கிணங்கி நிமாயி தன் நூலைப்படிக்கத் தொடங்கினர். படித்ததைக் கேட்டுக் கொண்டிருந்த ரகுநாதரின் முகத்தில் வருத்தக்குறிகள் தென்பட்டன. படிக்கப் படிக்க அவை அதிகமாயின. படித்து முடிந்ததும் விக்கி விக்கி ரகுநாத பண்டிதர் அழத்தொடங்கினர். அதன் காரணத்தை அறியாது வியப்படைந்த நிமாயி 'ஏன்' என்று வினவினர்.

'தோழா! நான் பல நாட்கள் உழைத்து நியாய சாஸ்திரத்தைப்பற்றி 'தீதிதி' என்ற ஓர் உயர்ந்த நூலை இயற்றினேன். என் நூல் முதல் நூலாகக் கருதப்படும் என்று இறுமாந்திருந்தேன். இன்று உன் நூலைக்கேட்டவுடன் என் எண்ணமெல்லாம் மண்ணோடு மண்ணாய்ப்போயிற்று. உன் நூலைக்கேட்ட பிறகு எவரும் என்நூலை மதிக்க மாட்டார். என் உழைப்பெல்லாம் வீணாயிற்றே என்று எண்ணுகையில் என்னையே அறியாது அழுது விட்டேன்' என்று ரகுநாதர் கூறினர்.

நிமாயி பண்டிதர் உரக்கச் சிரித்துக் கொண்டு 'தோழா, இந்த ஏட்டுச் சுவடியினலா உனக்கு இவ்வளவு துன்பம் ஏற்பட்டது? உன் சுகத்திற்காக என் உயிரையும் தியாகம் செய்வேன். இந்தநூல் எம்மட்டும்?' என்று சொல்லிக் கொண்டு தன் கையிலிருந்த சுவடியின் ஏடுகளை ஒவ்வொன்றாகக் கங்கையாற்றில் வீசியெறிந்தார். அவ்வேடுகளும் நிமாயி பண்டிதரின் உயர்ந்த தியாகத்தைப் பாடிக் கொண்டிருந்த அலைகளிலும் சுழல்களிலும் மறைந்துபோயின.

உயர்ந்த 'தீதிதி' நூலையும் நாணச் செய்யக்கூடிய அந்த நூலின் கதியைக்கண்ட ரகுநாத பண்டிதர் திகைத்துப் போனர்.

12

நோயில் கடவுளின் அருள்

அசுவினி குமாரதத்தரின் குருவின் பெயர் ஸ்ரீ ராஜநாராயண வசு. வசு கடவுளிடம் உண்மையன்பு கொண்டவர். வாழ்நாட்களின் பிற்பகுதியில் அவர் பட்சவாத (உடலின் ஓர் பகுதி செயலற்றுப் போதல்) நோயினல் வருந்தினர். அவர் அரசாங்க விடுதியில் தங்கியிருந்தார். ஒருநாள் அசுவினி தம் குருவான வசுவைக் காணச் சென்றிருந்தார். நோயால் வாடும் அவரைக் காண வேண்டியிருந்தமையினல் அசுவினியின்முகம் மிகவும் வாட்ட முற்றிருந்தது.

வணங்கிக் கொண்டே நுழைந்த அசுவினி குமாரதத்தரைக் கண்டதும் வசுவின் முகம் மிகவும் மகிழ்ந்தது. 'அன்பா! அசுவினீ! வா! வா! உன்னைப் பார்த்துப் பல நாட்கள் ஆயின' என்று சொல்லிக் கொண்டே படுத்த வண்ணமே அசைக்கக் கூடிய ஒற்றைக்கையினல் அன்புடன் அசுவினியை வசு தழுவிக்கொண்டார்.

பிறகு வேதங்கள், சாஸ்திரங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், முதலியவற்றினின்றும் உயர்ந்த கருத்துக்களை வெகுநேரம் மாணவனுக்குக் கூறிக்கொண்டிருந்தார்.

சுமார் நான்கு மணி நேரம் கழிந்தபின் அசுவினி விடைபெற்றுச் செல்ல எழுந்தார். 'ஆசிரியரே! தாம் நோயினல் வருந்துகின்றீர் எனக்கேட்டு வருத்தத்துடன் தம்மைக் காண வந்தேன். ஆனல் 4 மாதங்களாகப் படுத்த வண்ணம் இருந்தும் தங்கள் உள்ளத்தில் துன்பத்தின் உணர்ச்சியே இருப்பதாகத் தெரியவில்லையே! எப்போதும் போலவே

இன்பமாகவல்லவோ காலம் இன்றும் கழிந்தது. உங்கள் மனப்பான்மை விந்தையாக உளது' என்று கூறினர்.

ராஜ நாராயண வசு அன்பு பெருகக் கூறினர். 'அசுவினீ! கடவுளின் அருளால் பலவற்றைக்கண்டு இன்ப முற்றேன். கேட்டு மகிழ்ந்தேன். பல தின்பண்டங்களைப் புசித்தும் சுகம் பெற்றேன். அதே கடவுளின் அருளினல் எழுந்திருக்கமுடியாமல் சில நாட்கள் படுத்திருக்க நேர்ந்தால், அதற்காக ஏன் வருந்தவேண்டும்? அதையும் கடவுளின் அருள் என்று எண்ணி ஏன் இன்பமுறக் கூடாது?' என்று, கூறி முடித்தார். கடவுளின் அருள் இன்பத்தையளித்தால் என்ன? துன்பத்தை அளித்தால் தான் என்ன? பொறுப்பு அவருடையது தானே'

13

பொறுமை

ஹரிதாஸர் கடவுளின் பெயர்களைக் கூறுவதில் பித்துக்கொண்டவர். அவர் பிறவியில் முஸல்மான். ஆயினும் அவருக்குத் திருமாலின் நாமங்களைக் கூருமலிருக்க முடியாது. குலியாக்கிராமத்தில் கோராயி காஜி என்ற முஸல்மான் இருந்தான். அவன் பிடிவாதக்காரன். ஹரிதாஸரின் முறைகள் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் நாட்டுத் தலைவனிடம் ஹரிதாஸரைப் பற்றிக் குற்றச்சாட்டைச் செய்து 'இந்த நாஸ்திகனுக்குத் தக்க பாடம் படிப்பிக்கவேண்டும். அதைக்கண்ட மீதி மக்கள் இம்மாதிரிச் செயல்களில் இறங்காதொழிய வேண்டும். இவனுக்கு சாதாரண முறையில் தண்டனை விதிக்கப் படக் கூடாது. இவனுடைய முதுகில் கசையடி கொடுத்துக் கொண்டே எல்லா வீதிகளிலும் இவனை ஓடச் செய்ய வேண்டும். அடியின் துன்பம் பொறுக்க முடியாமல் ஓடிக் கொண்டே இவன் இறந்து விழ வேண்டும்' என்று வேண்டிக்கொண்டான்.

நாட்டுத்தலைவனும் அவ்விதமே உத்தரவிட்டான். பல முரடர்கள் ஹரிதாஸரை அடித்தவண்ணம் ஓட்டினர். ஹரிதாஸரின் வாயில் திருமாலின் திருநாமங்கள் கிளம்பிய வண்ணமே இருந்தன.

'ஹரியின் நாமத்தைச்சொல்லாதே' என்று காவலர்கள் அடித்தனர்.

'என்னை இன்னமும் வேண்டிய மட்டும் அடியுங்கள். ஹரி நாமத்தைச் சொல்லாதே யெனக் கூறுகையிலாவது அத்திருநாமம் உங்கள் நாவில் வருவது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது' என்றார் ஹரிதாஸர்.

முடிவில் ஹரிதாஸரின் முதுகுத் தோல் உரிந்தது. உதிரம் பெருகியோடிற்று. ஆயினும் அடி நிற்கவில்லை. நாமமும் நின்றபாடில்லை. வெகுநேரத்திற்குப் பிறகு உணர்வையிழந்த ஹரிதாஸர் தரையில் வீழ்ந்தார்.

இறந்து விட்டார் என்றெண்ணிய காவலர் கங்கையில் ஹரிதாஸரை இழுத்தெறிந்தனர். கங்கையின் குளிர்ந்த நீர் பட்டதும் உணர்வைப் பெற்ற ஹரிதாஸர் மிதந்த வண்ணம் புலியாக் கிராமத்தில் கரையேறினர். அவரைக் கண்டு செய்தியை அறிந்தமக்கள் நாட்டுத் தலைவன் மீது சினங் கொண்டனர்.

அப்போது ஹரிதாஸர் 'அவர் மேல் குற்றம் இல்லை. என் முற்பிறவிச் செயல்களின் பலனை நான் அனுபவித்தாக வேண்டும். அவரோ, வேறு எவரோ, இதற்குக் காரணமாக வேண்டும். மேலும் எம்பிரான் என்னுடைய அன்பின் மதிப்பைச் சோதனை செய்தார். நான் உண்மையன்பனா? அல்லது வேஷக்காரனா? என்று ஆராய்ந்தார். நான் கடைசி மூச்சு இருக்கும் வரை நாமத்தைச் சொல்லிவந்ததும் அவருடைய அருளாலேயே ஏற்பட்டது. இவர்கள் எல்லோரையும் திருமால் மன்னிப்பார். இதுவே என் வேண்டுகோள்' என்று மக்களிடம் மன்ருடி வேண்டிக் கொண்டார்.

அவர் பேச்சைக் கேட்ட எல்லோரும் பொறுமைக்கு வியந்தனர். கோராயியும் நாட்டுத் தலைவனும் தம் செயல்கட்கு வருந்தினர். ஹரி நாமத்தின் பெருமையையும் அறிந்தனர்.

செய்தி

இலண்டனில் ஸ்ரீ ராமகிருஷ்ணரது பிறந்த நாள் விழா

இலண்டனில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண வேதாந்த நிலையத்தில் சென்ற மார்ச்சு 20-ம் தேதியன்று ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருமானது 116-வது பிறந்த நாள் விழா பகிரங்கமாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் மூன்று வெளி அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். பொதுக் கூட்டம் மாலை 7-30 மணிக்குக் கிங்ஸ்வே ஹாலில் தொடங்கிற்று. அழைப்புப் பத்திரிகைகளைப் பெற்றிருந்தோர் தொடக்கத்திற்கு அரை மணிக்கு முன்பே வர ஆரம்பித்தனர்; வந்தவர் ஒவ்வொருவர்க்கும் அந்த விழாவிற்கென்றே பொறுக்கித் தொகுத்த, ஸ்ரீ ராமகிருஷ்ணரது உபதேச மொழிகள் அடங்கிய ஒரு சிறு பிரதி கொடுக்கப்பட்டது.

சொற்பொழிவாளரில் ஒருவராகிய வாக்கர் என்பார் கூட்டத்தாரை நோக்கி "இவ்வுலகில் எத்தனை மனிதரைப் பற்றி, அவர்களுடைய வாழ்க்கைகட்கும் உபதேச மொழிகட்கும் யாதொரு வேறுபாடும் இல்லை என்று கூறமுடியும்?" என்று வினவினர். அத்தகைய மக்கள் பெறுதற்கரிய மக்களே; ஆயினும் தற்காலத்திலே அத் திருக்கூட்டத்திலே ஒருவராக ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிளிர்கின்றார் என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்வைப் பற்றியோ, உபதேசத்தைப் பற்றியோ கூறவேண்டும் என்று தமக்குக்கடிதம் எழுதியிருந்ததாகவும், இரண்டும் ஒன்றானபோது எந்த ஒன்றைப்பற்றிப் பேசினும் பொருத்தமே யாதலின் தாம் எதைப்பேசத் தீர்மானித்தார் என்பதைத் தாமே அறியாததாகவும் சொன்னார். பின்னர் தற்கால நாகரிகத்தின் கேடுகளின் இயல்பைப் பற்றி ஆராய்ந்து, குருதேவரின் உபதேச மொழிகள் இன்னவாறு அவற்றை ஒழிக்கும் தன்மை வாய்ந்தன என்பதை விளக்கிக் காட்டினார்.

அவரது பேச்சின் நடுவே, இலண்டன் நிலையத்தை உறுதியான ஆதாரத்தின் மீது நிலைநாட்டுவதில் ஏற்பட்ட எத்தனையோ இடையூறுகளை சுவாமி கனநந்தர் (இலண்டன் நிலயத் தலைவர்) பொறுமையோடு வென்றமைக்காக அவர்களைப் புகழ்ந்தார்; மேலும் தம் முன்னே கண்ட கூட்டத்திற் பாதியைக் கூடத் தாம் எதிர்ப்பார்த்ததில்லை என்பதையும் ஒப்புக்கொண்டார்.

"உலகப் பொதுவான மதத்தை நோக்கி" எனும் பொருள்பற்றிப் பேசுவதாக முன் வந்த ஸர் ஜான் என்பாரும் அதே ஆச்சரியத்தைத் திரும்பக் கூறினார். முந்தின சொற்பொழிவாளர் ஆராய்ந்து கண்ட நாகரிக நோய்களைத் தீர்க்க, 1890-ம் ஆண்டை ஒட்டி சுவாமி விவேகாநந்தர் மேற்றிசை நாடுகட்குக் கொண்டு வந்த மதஸாரத் தொகுப்பு ஒன்றே வேண்டுவதாகும் என்ற தமது நம்பிக்கையை வற்புறுத்திப் பேசினர்.

மெய்ப்பொருளை உண்மையாக நாடியவர்க்குட் பெரும் பாலரை ஸர் ஜான் மூன்று வகுப்பினராகப் பிரித்தார்: (1) நாஸ்திகவாதிகள்; இவர்கள் பெரும்பாலும் இளைஞராவார்; இவர்களின் அறிவு சம்பந்தமான சிரத்தை மதிப்புக்கு உரியதாயிருந்தது; (2) அஞ்ஞேய வாதிகள்; அந்த நாஸ்திகர்களே நடுத்தர வயது வரை வளர்ந்து, முற்றிலும் அறிவையே மதிப்புள்ளதாகக் கடைப் பிடித்தலைக் கைவிட்டு, சமய உணர்ச்சியைச் சகிக்கும் தன்மை பெருகப் பெற்றவராய் இவ்வகுப்பினரானர்; (3) நம்பிக்கையுடைய மக்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடைசி வகுப்பிற்கு ஒரு சிறப்பான உதாரணமாகின்றனர். அவரது நம்பிக்கையே ஞான விளக்கத்தை அவர்க்குக் கொணர்ந்தளித்தது; அந்த ஞான விளக்கமே தற்காலத்தின் நிலைமைகட்கும் தேவைகட்கும் ஏற்ற ஒரு பொதுக் கொள்கையைத் திரட்டியளிக்கும் திறமை அவர்க்கு ஊட்டியது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உலக சமயத்தை மேற்றிசையார்க்கும் கீழ்த் திசையார்க்கும் விஸ்தாரமாக வெளியிட்டருளியவர் சுவாமி விவேகாநந்தர். ஏறக்குறைய நாம் அனைவரும் தெரிந்தே தேடிக்கொண்டு வருவதைப் பெருமை பெற்ற சுவாமிகளின் வாழ்க்கையிலும் உபதேசங்களிலும் காணலாகும் என்பது ஸர் ஜான் என்பவரின் நினைவு.

வெற்றிகரமாக நிறைவேறிய கூட்டத்தை சுவாமி கனநந்தர் ஒரு சில விறுவிறுப்பான மொழிகளைக் கூறி முடித்தார். முதற் பிரசங்கியார் நுண் மதியால் எடுத்துக் காட்டிய சங்கடங்களைத் தீர்க்க இரண்டாவது பிரசங்கியாரின் கருத்துக்கள் உதவும் வகையை அவர் எடுத்துக் காட்டினர். தமது பெயரால் நிலவும் மடம், சங்கம் இரண்டின் வளர்ச்சியைப் பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன்உணர்ந்து

கூறிய தீர்க்க தரிசன மொழிகளின் உண்மையைச் சென்ற அறுபது ஆண்டுகள் புலப்படுத்தி விட்டன; குருதேவருடைய ஏனைய திருவாக்குகளும் வருங்காலத்தில் மெய்ப்பிக்கப்படும் என்பதைப் பற்றித் தமக்கு ஐயமில்லை என்பதை சுவாமிகள் அறிவித்தார். நாளொரு விதமாகச் சக்தியை பெருக்கி வரும் ஒரு பெரிய ஞான இயக்கத்தின் ஒரு பகுதியே இலண்டனில் அமைந்துள்ள இராமகிருஷ்ண வேதாந்த நிலையம் ஆகும் என்றும், துயரஞ் செறிந்த இங்கில உலகிலே ஒருபெருங்கிளர்ச்சியை இவ்வியக்கம் உண்டு பண்ணப்போவது திண்ணம் என்றும் சுவாமி மொழிந்தார்.

பின்னர், தற்சமயம் S. W. 7, இலண்டனில் கிராம்வெல் ரோடு 63ல் நிறுவப்பட்டுள்ள நிலயத்தின் சார்பாகப் பிரசித்தி பெற்ற பிரசங்கியார்கட்கும் சபையார்க்கும் அன்போடு நன்றி கூறினர்.

மதிப்புரை

1. ஜீவப் பிரவாகம். 2. தர்மரக்ஷகன்.

பதிப்பாசிரியர்: வை. கோவிந்தன், சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை—14. பக்கம் - (ஏறக்குறைய) 100. புத்தகத்தின் விலை—ரூ 1.

ஆழ்ந்த கருத்துக்களும், தத்துவங்களும் அடங்கிய இலக்கியங்களாயும், இந் நாட்டிலும் பிற நாட்டிலும் உள்ள எழுத்தாளர்களின் உயர்தரமான சிருஷ்டிகளாயும் உள்ள சில நூல்களைச் சிறந்த முறையில் குறைந்த விலையில் வெளியிடும் நல்ல நோக்கத்தோடு 'சக்தி' ஆசிரியர் இத் தொகுப்புக்களை இயற்றத் தொடங்கியுள்ளனர். மொழிபெயர்ப்புக் கதைகளும் புதுக் கதைகளும் கவிதைகளும் தமிழ் இலக்கிய சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகளும், ஒவ்வொரு நூலிலும் காணப்படுகின்றன. கதைகள் பலவகைப்பட்ட வாழ்க்கைகளின் சித்திரங்களாய் அமைகின்றன. மக்களது வாழ்க்கையின் எளிமையும், மேன்மையும், இழிவும், விபரீதமும், விசித்திரமும், அசுத்தமும் விளக்கப்படுகின்றன. உலா மடலைப்பற்றியும், பஞ்ச லெக்ஷணத்தைப் பற்றியும், கம்பராமாயண ஆராய்ச்சிப் பதிப்பையும் பற்றிய கட்டுரைகள் புலமையும், தெளிவும், ஆராய்ச்சியும் சுவையும் நிரம்பியவை யாகின்றன. நூல்களிற் கையாளப்பட்ட நடை விறுவிறுப்பாயும், விஷயங்கட்கு ஏற்றபடியும் அமைந்துள்ளன. நூல்கள் நல்ல முறையில் அழகாக அச்சிடப் பட்டுள்ளன.


3. யோக சித்தி. 4. இல்லறவொழுக்கம் 5. அன்பு வழி

ஆசிரியர்: ஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதியார். கிடைக்குமிடம்: சுத்தானந்த நிலயம், புதுக்கோட்டை, திருச்சி ஜில்லா. விலை: (3) 0-4-0 (4) 0-4-0 (5) 0-10-0.

யோக சித்தியெனும் நூலில் 80 சிறிய பக்கத்தில் பக்கத்துக்கு 5 வீதம் எளிய நடையில் (ஏறக்குறைய வசன நடையில்) குறட்பாக்கள் அமைந்துள்ளன. கடவுள், உலகு, அறம் அறிவு, அன்பு, நடை, இல்லறம், குலம் தொழில், அருள், யோகம், சித்தியெனும் 12 இயல்களையுடையன. யோக சித்தியின் இயல்பைச் சுருக்கமாக 4 பக்கங்களில் ஒரு வணக்கத்தால் விளக்குகின்றனர். வையமெல்லாம் சிற்சபையும், நல் வாழ்வெல்லாம் வேள்வியும், செய்வதெல்லாம் தெய்வச் செயலும் ஆகுமாறு வாழும் வகைக்கு வேண்டிய உபதேசங்கள் எல்லாம் அளிக்கப்பட்டுள்ளன.

'இல்லறவொழுக்கம்' பெயருக் கேற்ப, இல்லறத்தாரது நல்வாழ்விற்கு வேண்டிய சிறந்த கருத்துக்களையும் இலக்ஷியங்களையும் எளிதாக விளங்கும் இனிய அகவலில் தெளிவாக உரைக்கின்றது. அரும் பெரும் கருத்துக்கள் ஆங்காங்கே மிக அழகாகச் சிறுசிறு வரிகளில் அமைக்கப்பட்டுள்ளன; அவை பலராலும் மனப்பாடம் பண்ணத்தக்கன. அகவல் 365 வரிகளைக் கொண்டுள்ளது.

'அன்பு வழி' — 36 பக்கமுள்ள இந்நூல் அன்பின் சிறப்பையும் அன்பு வாழ்வையும் பரக்கக் கூறுகிறது. சிறு சிறு இனிய சொற்களாலும் வாக்கியங்களாலும் இயன்ற தூய அன்புச் சித்திரம் இந்நூல்; விழுமிய கருத்துக்களைச் கொண்டு அமைத்த அன்புக் கோயில் இது; இதிலே அன்புத் தெய்வம் சிவமயமாய் இன்பமயமாய் இலகுவதையும், அத் தெய்வத்தை அடையும் நெறிகளையும் காணலாம். இதிலே கவியின் கற்பனையும், யோகியின் சிந்தனையும், அன்பனின் வந்தனையும் ஒருங்கே மிளிர்கின்றன.



ஸ்ரீமத் சுவாமி விரஜாநந்தஜி மஹராஜ்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் — சங்கம் தலைவர்

(1951 மே 30-ந்தேதி புதன்கிழமை மஹாசமாதியடைந்தார்)